வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 07.12.2023 வியாழக்கிழமை | இதழ் : 339 | பக்கங்கள் : 12




# சுயநிர்ணய உரிமை தமிழருக்கு அவசியம்

## பிரிட்டன் பாராளுமன்றில் வலியுறுத்து

- **காணாமல் ஆக்கப்பட்ட 18,000 பேருக்கு நடந்தது என்ன?**
- **பாதிக்கப்பட்டோர் தேவையை நல்லிணக்கம் பூர்த்தி செய்யாது**

லண்டன், டிசெம்பர் 07

**இலங்கையில் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை அவசியம் என்று பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர் மார்ட்டின் டே தெரிவித்துள்ளார்.**



இலங்கை அரசாங்கம் தற்போது மீண்டுமோர் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ஆனால், இது பொறுப்புக்கூறலுக்கான பாதையையோ அல்லது உரிய சாட்சியங்கள் பாதுகாப்பு பொறிமுறையையோ ஏற்படுத்தாது என்ற கரிசனை காணப்படுகின்றது - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்கொட்டிஸ் தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான அவர், நேற்று முன்தினம் பிரிட்டன் பாராளுமன்றத்தில் இலங்கையில் போர் குற்றங்களில் ஈடுபட்ட முன்னாள் இராணுவ தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்டவர்களுக்கு தடை விதிப்பது தொடர்பான விவாதத்தில் பங்கேற்று பேசியபோதே மேற்கண்டவாறு

11

# இலங்கைக்கு 15 கோடி டொலர் உலக வங்கி கடன் அளிக்கிறது

கொழும்பு, டிசெ. 07

இலங்கைக்கு 15 கோடி டொலர் (சுமார் 4,905 கோடி ரூபாய்) கடனுதவி வழங்குவதற்கு உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்று இந்த தகவலை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நாட்டின் வைப்புத் தொகை காப்புறுதித் திட்டம், மறுமூலதனமாக்கல், மத்திய வங்கியின் திறனைக் கட்டியெழுப்புதல் மற்றும் திட்டத்தை நடை முறைப்படுத்துதல் ஆகியவற்றின் கீழ் இந்தக் கடன் தொகை வழங்கப்படுகிறது.

இதன்படி, உரிய தீர்மானத்தை எட்டுவதற்காக ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

11

# ஐ. எம். எவ்வின் கடன் 12ஆம் திகதி கிடைக்கும்!

## அரசாங்கம் நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 07

சர்வதேச நாணய நிதியத்துடன் எதிர்வரும் 12ஆம் திகதி பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டால் அன்றைய தினமே இரண்டாம் கட்ட கடன் தொகையை பெற்றுக் கொள்ள முடியும் என்று அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று நடந்தபோது அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த

11

# சிப்பாய்க்கு மரண தண்டனை!

மன்னார், டிசெ. 07

சக சிப்பாய்களை சுட்டுக் கொன்றார் மற்றொரு சிப்பாய்க்கு காயம் ஏற்படுத்தினார் என்ற குற்றங்களுக்காக கைதான சிப்பாய்க்கு மன்னார் மேல் நீதிமன்றம் (குற்றவியல்) மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

மன்னார் பரப்புக் கடந்தான் இராணுவ முகாமில் கடந்த 2009 ஒக்ரோபர் 2ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் இரு சிப்பாய்கள் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார். இந்த சம்பவம் தொடர்பான வழக்கு மன்னார் மேல் நீதிமன்றத்தில் விசாரணைகளின் நடைபெற்று வந்த நிலையில், குறித்த சிப்பாய்

11

# வாள் தயாரிப்பவர்களை கைது செய்ய வேண்டும்!

## பிரதி பொலிஸ் மா அதிபரிடம் யாழ். அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 07

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு சம்பவங்களை நிறுத்துவதற்கு வாள் தயாரிப்பவர்களை கைது செய்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதி பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொண்டதாக யாழ். மாவட்ட அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் கேட்டுள்ளார்.

யாழ். சமூக செயற்பாடு மையத்தின் நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது சூழலுக்கேற்ப எமது வாழ்வாதாரங்கள், வாழ்க்கை முறையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். தொழில்நுட்ப வளர்ச்சியை

11

# நல்லிணக்கம் ஏற்படாததற்கு பௌத்த அமைச்சே காரணம்

## பாராளுமன்றில் கஜேந்திரன் எம். பி.

கொழும்பு, டிசெ. 07

யுத்தம் நிறைவு பெற்று 15 வருடங்களாகின்றன. நல்லிணக்கம் ஏற்படாமல் இருப்பதற்கு காரணம் புத்தசாசன அமைச்சும் தொல்பொருள் திணைக்களமும் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளாகும். இதனால் அவர்கள் தங்களின் செயல்பாடுகளை மாற்றிக்கொள்ள வேண்டும். என செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் புத்தசாசனம் உள்ளிட்ட அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலை புலிகளின் காலத்திலும் கூட வடக்கு,

11

# குழந்தைகளின் உணவுக்கும் வரி விதிப்பது அசாதாரணம்!

## அரசை சாடுகிறது எதிர்க்கட்சி

கொழும்பு, டிசெ. 07

குழந்தைகளுக்கான போசாக்கு உணவுகள், மருத்துவ பொருட்களுக்கும் வரி விதிக்கப்பட்டமை அரசின் மிகவும் அசாதாரண செயல். இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரி வருமானம் அத்தியாவசியம் என்று அரசாங்கம் கூறுகின்றது. ஆனாலும் வரி அறவிடும் முறையில் சாதாரண தன்மை ஒன்று இருக்க வேண்டும் என்று நாங்கள் கூறினோம். குறிப்பாக குழந்தைகளின் போசாக்குக்குத் தேவையான உணவு

11

# 'எட்கா' ஒப்பந்தப் பேச்சு மார்ச்சில் நிறைவடையும்

கொழும்பு, டிசெ. 07

'எட்கா' எனப்படும் உத்தேச இந்திய - இலங்கை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களுக்கான ஒப்பந்தம் குறித்த பேச்சுகளை 2024 மார்ச் மாதத்தில் நிறைவு செய்ய இரு தரப்பு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள எட்கா ஒப்பந்தத்தின் 12 ஆவது சுற்றுக் கலந்துரையாடல்

11

# புதிய கல்விச் சீர்திருத்தம் 2024இல் அறிமுகமாகும்!

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, டிசெ. 07

அனைத்து தரங்களுக்கும் புதிய கல்வி சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தும் முன்னோடி வேலைத்திட்டம் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அனுசரணையாளர்களின் ஆதரவுடன் கல்விக் கட்டமைப்பை முழுமையாக டிஜிற்றல் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்

11

# புதிய பொருளாதார திட்டம் ஜனவரியில் ஆரம்பமாகும்!

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 07

அனைத்து துறைகளையும் நவீனமயப்படுத்தி நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்செல்லும் புதிய பொருளாதார வேலைத்திட்டம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பழைய முறைகளை தொடர்வதன் ஊடாக நாட்டுக்கு எதிர்காலம் கிடையாது எனவும், கடந்த சில வருடங்களில் தேசம் என்ற வகையில் எதிர்கொண்ட கசப்பான அனுபவத்தை எதிர்கால

11



# இப்படியும் நடக்கிறது

அமெரிக்காவின் பிரபல எழுத்தாளரான மார்க் ட்வைன் இளைஞராக இருந்த போது ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆறு மாதம் கழிந்த பின் அந்த நிறுவனத்தின் முகாமையாளர் அவரை அழைத்து வேலையிலிருந்து அவரை நிறுத்துவதாகக் கூறினார்.

காரணம் என்னவென்று ட்வைன் வினவியபோது முகாமையாளர் சொன்னார், "நீ ஒரு சரியான சோம்பேறி. நீ இந்த நிறுவனத்துக்கு லாயக்கில்லை." என்று.

மார்க் ட்வைன் உடனே சொன்னார், "நீங்கள்தான் என்னைவிட சரியான சோம்பேறி" என்று.

முகாமையாளருக்கு தலைக்கு மேலே கோபம் வந்தது. தன்னை ஏன் அவ்வாறு கூறினார் என்று கேட்டார். அதற்கு ட்வைன் சொன்னார்,

"நான் ஒரு சோம்பேறி என்பதைக் கண்டுபிடிக்க உங்களுக்கு ஆறு மாதம் ஆகியிருக்கிறதே? நீங்கள் ஒரு சோம்பேறி என்பதை நான் வேலையில் சேர்ந்த அன்றே தெரிந்து கொண்டேன்".

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானபீடத்தில் கல்வி கற்பவர்களில் அறுபது வீதமானவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற தகவலை சில மாதங்களுக்கு முன்னர், அந்தப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் எஸ். பத்மநாதன் தெரிவித்திருந்தது ஞாபகமிருக்கலாம்.

அதற்கு காரணம் நமது மாணவர்கள் விஞ்ஞான பாடங்களை படிக்க அதிக ஆர்வம் காட்டாததுதான் என்பது ஒன்றும் ஆராய்ச்சிக்குரியதல்ல. அவ்வாறு கல்வி கற்பவர்களும் டாக்டராகவோ அல்லது பொறியியலாளராகவோ வந்துவிட வேண்டும் என்பதிலேயே குறியாக இருப்பார்கள். சில வேளைகளில் அந்தத் துறைகளுக்கு அனுமதி கிடைக்காவிட்டாலும் விஞ்ஞான பட்டதாரிகளாக வருவதை விரும்புவதில்லை. ஏதேனும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் பொறியியல் பீடத்துக்கோ அல்லது ரஷ்யாவிலோ பொஸ்னியாவிலோ மருத்துவத்துறையில் படிக்கவோ சென்றுவிடுவார்கள். மருத்துவத்துறையில் கல்வி கற்பவர்களும் தமது கல்வி முடிவடைந்த பின்னர், யாழ்ப்பாணத்தில் பணியாற்ற விரும்புவதில்லை என்பதும் மற்றுமொரு கவனத்திற்குரியது.

களுத்துறையிலும் பாணந்துறையிலும் அரச மருத்துவ மனைகளில் நமது யாழ்ப்பாணத்து இளம் டாக்டர்களை தாராளமாக காணலாம்.

அதற்கு என்ன காரணம் என்று சற்று உள்ளே போய் ஆராய்ந்தால், நமது சமூகம் இன்னமும் திருந்தவில்லை என்பதை அறிந்துகொள்ளலாம்.

இன்று நமது பல்கலைக் கழகத்தில் விளையாட்டுத் துறை போதனாசிரியராக இருக்கின்ற மாணிக்கவாசகர் இளம்பிறையன் தனது முகநூலில் எழுதியிருக்கின்ற ஒரு செய்தி நமது கவனத்தைப் பெற்றது.

அதனை அப்படியே கீழே தருகின்றேன்:

'யாழ் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் கல்வி பயில்வதற்கு யாழ். மாவட்ட மாணவர்கள் எவரும் விரும்பாத காரணத்தால் இம்முறை யாழ். மாவட்டத்தில் இருந்து எவரும் தெரிவு செய்யப்படவில்லையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 2022ஆம் ஆண்டு உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக தெரிவு விவரம் அண்மையில் வெளியிடப்பட்டது. அதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் பொறி யியல் கற்பதற்கு தகுதியுள்ள அனைவரும் தென்பகுதி பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பித்ததன் காரணமாக எவரும் யாழ். பல்கலைக்கழகத்தை விருப்ப தேர்வாக கொள்ளாத காரணத்தால் எவரும் இம்முறை அனுமதிக்கப்படவில்லை. மிகுந்த சிரமத்தின் மத்தியில் 1990களில் அனுமதி பெறப்பட்டு 2010களில் ஆரம்பிக்கப்பட்ட பொறியியல் பீடம் எம் மாணவர்கள் பயன் பெறவேண்டுமென்ற நோக்கிலேயே ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால், அப்பீடத்தில் கல்வி கற்க எம் மாணவர்கள் விரும்பாதது வேதனையான விடயம் மட்டுமல்ல, எமது பெற்றோரும் தங்களின் பிள்ளைகளை எமது மண்ணிலேயே கல்வி கற்பிக்க விரும்பாதது ஆச்சரியமான விடயமாகும்'.

இதுவே அவர் தெரிவித்திருக்கின்ற தகவல்.

இனி என்ன தெற்கிலிருந்து இளைஞர்கள் பொறியியல் பீடத்தையும் நிரப்புவார்கள். நமது அரசியல் தலைவர்களும் (அப்படி யாராவது இருக்கிறார்களா என்று நீங்கள் கேட்டால் அதற்கு நான் பாத்திரவாளி அல்ல) அதற்கு எதிராக - அதாவது சிங்கள மயமாதலுக்கு எதிராக முழங்குவார்கள்.!

மார்க் ட்வைனுக்கு தனது முகாமையாளர் பற்றி ஆரம்பத்திலேயே தெரிந்துவிட்டது போல, நம் மாணவர்களுக்கு நமது பல்கலைக்கழகம் பற்றி 'ஏதாவது' தெரிந்துவிட்டதோ தெரியவில்லை.!

**- ஊர்க்குருவி.**

# பரிசு, கடன் வழங்குவதாகக்கூறி பணம் வாங்கிய மூவர் கைது!

கொழும்பு, டிசெ. 07

பரிசுப் பொருட்கள் மற்றும் கடன் வழங்குவதாகக் கூறி பண மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சியம்பலாண்டுவை மற்றும் அத்திமலை பிரதேசங்களில் மோசடியில் ஈடுபட்ட இரு பெண்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் பிரதிநிதிகளாக தங்களை அடையாளப்படுத்தி பிரதேசவாசிகளுக்கு சுயதொழில் செய்ய நிதியுதவி வழங்குவதற்காகவும் சிறுவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்குவதற்காகவும் அந்த அமைப்பின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 600 ரூபாய் பணத்தை அவர்கள் வசூலித்தனர்.

இவ்வாறு வசூலிக்கப்பட்ட 26 ஆயிரம் ரூபாய் பணத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் கடந்த 4 ஆம் திகதி ஒரு இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் பணத்தை பெற்று வங்கியில் வைப்பிலிட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அதே பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர்.

இதேவேளை சியம்பலாண்டுவ பிரதேசத்தில் இவ்வாறு பணசேகரிப்பில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவரும் ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து 70,300 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மொனராகலை பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடையவர் எனவும் 32 வயதான குறித்த பெண் சியம்பலாண்டுவை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிய வந்துள்ளது. (ஐ)

# இரு வாரங்களுக்குள் சம்பா அரிசி இறக்குமதி!

கொழும்பு, டிசெ. 07

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் சம்பா அரிசி இறக்குமதி செய்யப்படும் என அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

50 ஆயிரம் மெற்றிக் தொன் சம்பா அரிசியை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு அண்மையில் அமைச்சரவை எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் இந்த இறக்குமதி மேற்கொள்ளப்படுவதாக அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிதுந்தர தெரிவித்தார்.

சம்பா அரிசியை இறக்குமதி செய்வதற்கான கேள்விகோரல் நடவடிக்கை நேற்று நிறைவடைந்ததாகவும் அரிசி இருப்பு இந்தியாவிலிருந்தே கொள்வனவு செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாட்டு விலைக்கு மேல் அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களை கைது செய்வதற்கான சோதனைகள் தொடரும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அரிசியை அதிக விலைக்கு விற்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சி. ஏ. ஏ. தெரிவித்துள்ளது. (ஐ)

# அனைவரின் ஆதரவையும் பெறுபவரே ஜனாதிபதி!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, டிசெ. 07

இலங்கையில் அடுத்ததாக ஆட்சிக்கு வரும் ஜனாதிபதி அனைவரின் ஆதரவையும் பெறக்கூடியவராக இருக்க வேண்டியது மிகவும் அவசியமானது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன அடுத்த வருடம் நடைபெறும் எந்த தேர்தலையும் எதிர்கொள்ள தயாராகி வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

அடுத்த வருடத்தின் முதல் காலாண்டில் மின்சார கட்டணத்தில் குறைப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (ஐ)

# உக்ரைன் இராணுவத்தில் இணைந்து போரிட்ட மூன்று இலங்கையர்கள் ரஷ்ய தாக்குதலில் பலி!

கொழும்பு, டிசெ. 07

உக்ரைன் இராணுவத் தில் சேவையாற்றிய இலங் கையின் மூன்று முன்னாள் சிப்பாய்கள், ரஷ்ய தாக்குதலில் உயிரிழந்துள்ளனர் என தெரியவருகின்றது. இதில் ஒருவர் இலங்கை இராணுவத்தில் இருந்து சட்ட பூர்வமாக விலகி கடந்த வரு டம் மார்ச் மாதம் உக்ரைனில் இராணு வத்தில் இணைந்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதியே இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (அ)

# பாடசாலை மற்றும் பல்கலை கல்வியிலிருந்து ஆண் மாணவர்கள் இடைவிலகல் அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 07

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வியில் இருந்து மாணவர்கள் குறிப்பாக ஆண் மாணவர்கள் இடைவிலகும் வீதம் அதிகரித்துள்ளதுடன் பெருமளவிலான பாடசாலை மாணவர்கள் பல்வேறு காரணிகளினால் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் கல்வியமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொரோனா பெருந்தொற்று தாக்கத்தினால் கல்வித்துறை பெரும் பாதிப்பை எதிர் கொண்டது.கொரோனா பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள கல்வித்துறையை மேம்படுத்த எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பாடத்திட்டங்களை நிறைவு செய்வது முழுமையடையவில்லை.அதன்பின்னர் பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் கல்வித்துறை மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.பாடசாலை மாணவர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வியில் இருந்து மாணவர்கள் குறிப்பாக ஆண் மாணவர்கள் இடைவிலகும் வீதம் அதிகரித்துள்ளது. பெரும்பாலான பல்கலைக் கழகங்கள் இலாபமடையும் நோக்கத்துடன் செயற்படுகின்றன. நிர்வாக கட்டமைப்பின் மோசடியால் மாணவர்கள் தான் இறுதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
07.12.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மேலாதிக்க மனோநிலை மாறாதவரையில்

"அரசாங்கத்துக்கு நல்லிணக்கத்தில் அக்கறை இல்லை", என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார். அவரின் கருத்து முற்றிலும் சரியானது. யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்கள் முடிவுற்ற பின்னரும்கூட விடுதலைப் புலிகளை முன்வைத்து மட்டுமே அரச இயந்திரங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லிணக்கம் பற்றி பேசுகின்றார் – நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பேசுகின்றார் – இன்னும் பல தென்னிலங்கை அரசியல்வாதிகள் பேசுகின்றனர். தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க முறைமையிலிருந்து கற்றுக் கொள்ளப் போவதாகக் கூறுகின்றனர். மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்திலிருந்து தென்னாபிரிக்கா தொடர்பில் பேசி வருகின்றனர். ஆனால், எந்தவொரு முன்னேற்றகரமான நகர்வுகளும் இதுவரையில் இடம்பெறவில்லை.

இலங்கையின் அனைத்து அரச கட்டமைப்புகளும் போர்க் கால கட்டமைப்புகளாகவே இருக்கின்றன. போர்க் கால மனோநிலையிலேயே படைத் துறையினரும் நாட்டின் புலனாய்வு கட்டமைப்புகளும் இருக்கின்றன. இவ்வாறான கட்டமைப்புகள் மறுசீரமைக்கப்படாத வரையில் நாட்டில் நல்லிணக்கம் என்பது கானல் நீர்தான். போர்க் கால அரச மனோநிலை என்பது அனைத்திலும் பயங்கரவாதத்தை தேடுவதுதான். தமிழர் அனைவரும் விடுதலை புலிகள் என்னும் கண்ணோட்டத்தில்தான் அரச அணுகுமுறை இருந்தது. அந்த அடிப்படையில்தான் பயங்கரவாத தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. இந்த அணுகுமுறையில் இப்போதும் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை.

பிரபாகரனின் பிறந்த தினத்தில், பிறந்த ஒருவர் அவரது பிறந்த தினத்துக்காகக்கூட ஒரு கேக்கை கொள்வனவு செய்து கொண்டு வீதியால் சுதந்திரமாக செல்ல முடியாத சூழலே காணப்படுகின்றது. இவ்வாறான தொரு சூழலில் நல்லிணக்கம் என்பது சாத்தியமற்றது. போருக்கு பின் னரான நல்லிணக்க முயற்சிகளின் அடிப்படையே பரஸ்பர நல்லுறவுதான். நல்லுறவு இல்லாது போனால் நல்லிணக்கம் என்பது எவ்வாறு சாத்தியப்படும்?

தமிழ் மக்கள் நல்லிணக்கத்துக்கான முயற்சிகளை நம்ப வேண்டுமாயின், முதலில் அவர்கள் அச்சமற்ற சூழலில் வாழ வேண்டும். ஆனால், அவ்வாறானதொரு சூழல் இன்றுவரையில் சாத்தியப்படவில்லை. இப்போதும் தமிழ் மக்கள் அரச படை அதிகாரிகளை அச்சத்துடன்தான் நோக்க வேண்டியிருக்கின்றது. புலனாய்வாளர்களை பார்த்து அச்சப்பட வேண்டியிருக்கின்றது. ஏனெனில், போர்க் கால மனோநிலையால் இறுகிப் போயிருக்கும் அரச கட்டமைப்புகள் மறுசீரமைக்கப்படவில்லை. முன்னர் அவர்கள் எவ்வாறான மனோநிலையில் தொழில்பட்டார்களோ, அதே மனோநிலையில்தான் இப்போதும் தொழில்படுகின்றனர். அவர்களின் மீது குற்றம்சாட்ட முடியாது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுவது போன்று – நல்லிணக்கத்தில் அரசாங்கத்துக்கு உண்மையான அக்கறையில்லை. அரசாங்கம் நல்லிணக்கம் என்பதை உதட்டளவில்தான் உச்சரிக்கின்றது. ரணில் பல்வேறு விடயங்களை கூறினார். ஆனால், எதனையுமே நடைமுறையில் நிரூபிக்கவில்லை.

'ஈழநாடு' தொடர்ச்சியாக ஒரு விடயத்தை சுட்டிக்காட்டி வந்திருக்கின்றது. அதாவது, நல்லிணக்கத்தின் ஆரம்பம் என்பது – மக்கள் அரசாங்க முயற்சிகளை நம்ப வேண்டும். அவ்வாறு நம்ப வேண்டுமாயின், ஆட்சியாளர்கள் சில விடயங்களை செயலில் காண்பிக்க வேண்டும். அந்த அடிப்படையில் நல்லிணக்கத்தின் ஆரம்பம் அரசமைப்பில் இருப்பவற்றை ஆட்சியாளர்கள் அமுல்படுத்த வேண்டும். மாகாண சபைகள் எவ்வித தலையீடுகளும் இன்றி இயங்க வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்திலிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்கள் மீளவும் மாகாண சபைகளுக்கு திரும்ப வேண்டும். போர்க் கால அரச கட்டமைப்புகள் முற்றிலும் மறுசீரமைக்கப்பட வேண்டும். இவ்வாறானதொரு சூழலில்தான் நல்லிணக்கம் துளிர்விடும். மக்கள் அச்சத்துடன் இருக்கின்றபோது நல்லிணக்கம் என்றுமே சாத்தியமற்றது.

# உழவு இயந்திர கலப்பையில் சிக்கிய குழந்தை உயிரிழப்பு!

வவுனியா, டிசெ. 07

உழவு இயந்திரத்தின் கலப்பையில் சிக்குண்டு காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மூன்றரை வயது குழந்தையொன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

வவுனியா நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த சிவயோகநாதன் விந்துயன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த 23ஆம் திகதி குறித்த குழந்தையின் தந்தை உழவு இயந்திரத்தின் சுழலக்கூடிய கலப்பையை வீட்டில் வைத்து இயக்கிக் கொண்டு இருந்தவேளை குழந்தை தடி ஒன்றைக் கலப்பையினுள் வைத்துள்ளது.

இந்நிலையில் தடி கலப்பையினுள் இழுக்கப்பட்டபோது குழந்தையும் சேர்ந்து இழுபட்டதனால் கலப்பையில் சிக்குண்டு படுகாயமடைந்தது.

படுகாயமடைந்த குழந்தை ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, இறுதியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# திருட்டை மறைத்த பொலிஸ் அதிகாரிகள் இடைநிறுத்தம்

கொழும்பு, டிசெ. 07

நவம்பர் 30ஆம் திகதி நாரம்மல நகரில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களின் விவரங்களை மறைத்த குற்றச்சாட்டின் பேரில், நாரம்மல பொலிஸ் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் இன்ஸ்பெக்டர் மற்றும் உப பொலிஸ் பரிசோதகரை பணி இடைநீக்கம் செய்ய குளியாப்பிட்டி உதவி பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவிட்டுள்ளார்.

அன்றைய தினம் ஏழு கடைகளை திருடர்கள் உடைத்துள்ளதாகவும், மேற்படி அதிகாரிகள் அவ்வாறான ஒரு கொள்ளைச் சம்பவத்தை மட்டுமே பதிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடைக்காரர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்ய வந்தனர். ஆனால் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஒரு கடைக்காரரின் முறைப்பாட்டை மட்டுமே பதிவு செய்திருந்தனர். குருநாகல் வீதியிலுள்ள கையடக்கத் தொலைபேசி கடையொன்றில் இருந்து 2.7 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டதை மாத்திரமே பொலிஸார் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் திருட்டுகள் நடந்த மற்ற இடங்களுக்குச் செல்வதைக் கூட தவிர்த்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

குளியாப்பிட்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைத்த தகவலின்படி, முதற்கட்ட விசாரணையின் பின்னர், முறைப்பாடுகளை மறைத்ததாக கூறப்படும் நாரம்மல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரை பணி இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அவர்கள் ஆறு திருட்டுகள் தொடர்பான அசல் முறைப்பாட்டை பதிவு செய்யவில்லை, அவற்றை ஆவணப்படுத்த தவறி குற்றம் நடந்த இடத்திற்குச் செல்லவில்லை. ஆறு குற்றங்களை விசாரிக்கவில்லை என்று மூத்த காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(அ)

# எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணி மன்னாரில்!

கொழும்பு, டிசெ. 07


சர்வதேச எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு "சமூகத்தை வலுப்படுத்துவோம் எயிட்ஸை தடுப்போம்" எனும் தொனிப்பொருளில் மன்னார் மாவட்டத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வு நடைபவனி நேற்று நடைபெற்றது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிராந்திய பாலியல் நோய்கள், எய்ட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஆரம்பமான பேரணி, மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை வீதியூடாக மன்னார் பொலிஸ் நிலைய பிரதான வீதியை சென்றடைந்து, பின்னர், அங்கிருந்து மன்னார் பஸார் வீதியூடாக பொது விளையாட்டு மைதான வீதியை கடந்து மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையை அடைந்தது.

இந்த ஊர்வலத்தில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. விேனாதன், எய்ட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவு மருத்துவ அதிகாரி, மருத்துவர்கள், பணியாளர்கள், தாதியர்கள், சுகாதார பணியாளர்கள், சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மதத் தலைவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**இடபம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். மனநிறைவு பெறும் நாள்.

**மிதுனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டு கொடுத்து போக வேண்டிய நாள்.

**துலாம்**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். பணிகளை போராடி முடிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்து கொள்வீர்கள். முயற்சி வெற்றி அடையும். உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**தனுசு**
மற்றவர்களால் செய்யமுடியாத செயற்கரிய காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். முயற்சிகள் பலிதமாகும். சாதித்துக் காட்டும் நாள்.

**மகரம்**
உற்சாகமடைவீர்கள். சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுயோகத்தில் அமைதி நிலவும். எதிர்பாராத நன்மைகள் கிட்டும் நாள்.

**மிக்ஜம் புயல் தாக்கம்:**

# 866 பகுதிகளில் வெள்ளம் ஒன்பது பேர் உயிரிழந்தனர்!

**- 75 ஆயிரம் பேர் மீட்பு பணிகளில்-**

**சென்னை, டிசெ. 07**

**வெள்ளநீர் வடிந்து வருவதாகவும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் 75 ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர் என்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது. மேலும், சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் 866 இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.**

மேலும், 372 நிவாரண முகாம்களில் 41 ஆயிரத்து 406 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதுவரை (நேற்று மதியம்) 37 இலட்சம் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 19 ஆயிரத்து 86 பேர் படகுகள் மூலம் மீட்கப்பட்டனர் என்றும் தெரிவித்துள்ளது.

இதேசமயம், கனமழை மற்றும் வெள்ளத்தால் 9 பேர் உயிரிழந்தனர். சென்னையில் மட்டும் நால்வர் உயிரிழந்தனர். ஒருவர் மரம் விழுந்தும் மூவர் மின்சாரம் தாக்கியும் உயிரிழந்தனர்.

தவிர, 311 கால்நடைகள் உயிரிழந்தன. 378 குடிசை வீடுகள் முழுமையாகவும், 35 வீடுகள் பகுதியாகவும், 88 வீடுகள் சிறியளவிலும் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# 4 ஆயிரம் கோடி திட்டம் குறித்து வெள்ளை அறிக்கை வேண்டும்!

**பா. ஜ. க., நாம் தமிழர் கட்சிகள் வலியுறுத்து**

கோவை, டிசெ. 07

4 ஆயிரம் கோடி ரூபாயில் மேற்கொள்ளப்பட்ட பணிகளால் சென்னையில் வெள்ளப் பாதிப்பு ஏற்படாது என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்திருந்தார். அந்தத் திட்டம் தொடர்பில் வெள்ளை அறிக்கையை அவர் வெளியிடுவாரா என்று நாம் தமிழர் கட்சியின் சீமான், பா. ஜ. கவின் வானதி சீனிவாசன் ஆகியோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

விளம்பரம் தேடாமல், வெள்ளத்தில் சிக்கி முடங்கியிருக்கும் மக்கள் இயல்பு நிலைக்கு திரும்ப தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு, பா. ஜ. க. தேசிய மகளிரணி தலைவரும், கோவை தெற்கு எம்எல்ஏவுமான வானதி சீனிவாசன் கோரிக்கை விடுத்துள்ளார். மிக்ஜம் புயலின் கோரத்தாண்டவத்தால் சென்னை நகரமே கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. ரூ.4,000 கோடி பணிகளால் தான் பாதிப்பு குறைவு என மீண்டும் விளம்பரத்தில் இறங்கியுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். சிங்கார சென்னை திட்டத்துக்கு ஒதுக்கிய நிதி குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட தயாராக உள்ளாரா முதல்வர் ஸ்டாலின்? - என்று கேட்டார்.

இதேபோன்று, “எந்தக் காலத்திலும் இனி சென்னை வெள்ளக்காடாக மாறாவண்ணம் தடுக்கும் விதத்தில் நகர கட்டுமானத்தையும், வடிகால் அமைப்பையும் உருவாக்க வேண்டும். வடிகால் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏறக்குறைய 4,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் குறித்து தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்” என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

(ஐ)

# உலகின் சக்திவாய்ந்த பெண்கள்; அமைச்சர் நிர்மலாவுக்கு இடம்!

புதுடில்லி, டிசெ. 07

போர்ப்ஸ் இதழின் உலகின் சக்தி வாய்ந்த பெண்கள் பட்டியலில், இந்தியர் நால்வர் இடம் பெற்றுள்ளனர். மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 32ஆம் இடம் பிடித்தார். இவர் தொடர்ந்து 5வது ஆண்டாக இப்பட்டியலில் இடம்பிடித்துள்ளார்.

உலக அளவில் மிகவும் சக்தி வாய்ந்த 100 பெண்கள் கொண்ட பட்டியலை ஆண்டுதோறும் அமெரிக்காவின் போர்ப்ஸ் இதழ் வெளியிட்டு வருகிறது. செல்வம், ஊடகம், தாக்கம் மற்றும் செல்வாக்கு ஆகிய 4 துறைகளில் இருந்து இந்த பட்டியல் தயாரிக்கப்படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான பட்டியலை போர்ப்ஸ் இதழ் வெளியிட்டுள்ளது.

இதில் உலக அளவில் மிகவும் சக்திவாய்ந்த பெண்ணாக ஐரோப்பிய குழுவின் தலைவர் ஊர்சுலா வாண்டர் லியன் முதலிடத்தை பிடித்து உள்ளார். ஐரோப்பிய மத்திய வங்கி தலைவர் கிறிஸ்டின் லகார்ட் 2ஆம் இடத்தையும், அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் 3வது இடத்தையும் பிடித்துள்ளனர்.

இந்தப் பட்டியலில் 4 இந்தியர்கள் இடம் பிடித்துள்ளனர். இதில் தமிழரான மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 32ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

கடந்த 4 ஆண்டாக இந்தப் பட்டியலில் இடம்பிடித்து வரும் அவர் 5ஆவது முறையாக இந்த ஆண்டும் தனது இடத்தை உறுதி செய்திருக்கிறார்.

(ஐ)

# புயல் பாதிப்பு நிவாரணமாக 5,060 கோடி ரூபாய் வேண்டும்!

**தமிழக முதல்வர் பிரதமருக்கு கடிதம்**

சென்னை, டிசெ. 07

தமிழகத்தில் ‘மிக்ஜம்’ புயல் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களை சீர்செய்திட இடைக்கால நிவாரணமாக ரூ.5,060 கோடி வழங்கக் கோரி பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக, தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழகத்தில் கடந்த 2, 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில் தாக்கிய ‘மிக்ஜம்’ புயல் மற்றும் வரலாறு காணாத பெருமழையின் காரணமாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களில் மிக அதிகமான மழைப்பொழிவு பெறப்பட்டது.

இதன் காரணமாக, இந்த நான்கு மாவட்டங்களில், மிகக்கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. சாலைகள், பாலங்கள், பொது கட்டடங்கள் என பல்வேறு உட்கட்டமைப்புகள் சேதம் அடைந்துள்ளன. மேலும், இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் விளக்கமாகக் குறிப்பிட்டு, தமிழகத்துக்கு இடைக்கால நிவாரணமாக குறிப்பிட்ட தலைப்புகளின் கீழ் ரூ.5,060 கோடியினை உடனடியாக வழங்கிடுமாறு முதல்வர் ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடியைக் கேட்டுள்ளார். (ஐ)

# தெல்லிப்பழையில் வன்முறையில் ஈடுபட்ட ஹைஏஸ் வாகனம் மீட்பு!

## புதுக்குடியிருப்பில் பதுங்கியிருந்த இரண்டு பேர் அதிரடியாக கைது

யாழ்ப்பாணம், டிசெ. 07

**தெல்லிப்பழை மற்றும் மல்லாகம் பகுதியில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் பயணித்த வாகனம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் வைத்து மீட்கப்பட்டுள்ளது.**

புதுக்குடியிருப்பில் மறைந்திருந்த இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருந்தனர்.

இதில் வாள் வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இளைஞன் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில், வன்முறையில் ஈடுபட்ட கும்பலை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

அதேவேளை, குறித்த வன்முறைச் சம்பவமானது, யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் இரு வன்முறை கும்பல்களுக்கு இடையில் நீண்ட காலமாக நிலவி வரும் மோதல் சம்பவத்தின் தொடர்ச்சி எனக் கூறப்படுகின்றது.

(அ)



# டெங்கு நோய் விழிப்புணர்வு தெருவெளி நாடகம் யாழில்!

யாழ்ப்பாணம், டிசெ. 07

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் விதமாக விழிப்புணர்வு தெருவெளி நாடகமொன்று நேற்று நடைபெற்றது.

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட குறித்த தெருவெளி நாடகம் அச்சுவேலி பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

(அ)

# ஐ.நா பிரதிநிதியுடன் ரிஷாத் சந்திப்பு



கொழும்பு, டிசெ. 07

பலஸ்தீன மக்களின் அவல நிலை மற்றும் இலங்கையில் நீண்டகால இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம் தொடர்பில், ஐக்கிய நாடுகள் சபை தீவிரமாக கவனஞ்செலுத்த வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளரை நேற்று முன்தினம் ஐ.நா தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளரை சந்தித்ததில் மகிழ்ச்சியடைகின்றேன். பலஸ்தீனின் அவல நிலை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இங்கு கலந்துரையாடினோம். பலஸ்தீன் - இஸ்ரேல் மோதலை உடன் நிறுத்தும் வகையில், ஐ.நா. நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறி, 159 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு அனுப்பிய மகஜர் உரியவர்களிடம் சென்றடைந்துள்ளதாக வதிவிட ஒருங்கிணைப்பாளர் உறுதிப்படுத்தினார்.

அத்துடன், நீண்டகால இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றத்துக்கு எதிர்காலத்தில் ஐ.நா.வின் ஆதரவு குறித்தும் சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வெறுப்புப் பேச்சுக்கள் பற்றியும் இருவரும் கலந்துரையாடினோம்" என்று கூறினார்.

(அ)

# வட மாகாணப் பண்பாட்டு விழா கிளிநொச்சியில் நேற்று நடந்தது!





கிளிநொச்சி, டிசெ. 07

வடக்கு மாகாண பண்பாட்டு விழா நேற்று இடம்பெற்றது. வடக்கு மகாண கலை, கலாசார பண்பாட்டை வெளிப்படுத்தும் பண்பாட்டுப் பேரணியுடன் இது ஆரம்பமானது.

வடக்கு மாகான கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் வாகன ஊர்திப் பேரணி ஆரம்பமானது.

தொடர்ந்து காக்கா கடைச் சந்தியில் பண்பாடு, கலை, கலாசாரத்தை வெளிப்படுத்தும் பண்பாட்டுப் பேரணி ஆம்பமாகி விழா மண்டபம் வரை சென்றது.



இந்த பண்பாட்டுப் பேரணியை மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட விருந்தினர்கள் வரவேற்றனர்.

இதன்போது, தமிழ், சிங்கள, இஸ்லாமிய, கிறிஸ்தவ பண்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் பொம்மலாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரை, தமிழ் இன்னியம் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கி ஆரம்ப பேரணி இடம்பெற்றது.

தொடர்ந்து பண்பாட்டு அருங்காட்சியகம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரால் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது, ஓவியங்கள், பாரம்பரிய பயன்பாட்டு பொருட்கள், புத்தகங்கள், ஒளி ஒலி நாடாக்கள் என பல அம்சங்கள் கண்காட்சி கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டதுடன் விற்பனையும் இடம்பெற்றது.

இன்றும் நாளையும் குறித்த கண்காட்சி இடம்பெறவுள்ளதுடன், மாணவர்கள், பெற்றோர் என பலரும் பார்வையிட்டனர்.

(அ)

# சர்வதேசத்தை தொடர்ந்து ஏமாற்றுகின்றது இலங்கை!

## சாணக்கியன் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 07

இலங்கை அரசு சர்வதேசத்தை ஏமாற்றிவருவதாக பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் அமுலிலுள்ள மிகவும் சர்சைக்குரிய சட்டங்களில் ஒன்றான பயங்கரவாத தடைச்சட்டத்தின் காரணமாக இலங்கை பல வருடங்களாக சர்வதேசத்தில் மிகவும் கவனம் பெற்ற நாடாக காணப்படுகின்றது.

இலங்கையில் சிவில் யுத்தம் நிலவிய காலப்பகுதியில் பயங்கரவாத தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது. தொடர்ச்சியாக ஆட்சி செய்த இலங்கை அரசாங்கங்கள் உண்மையான காரணங்களின்றி முஸ்லிம்களையும், தமிழர்களையும் தடுத்து வைப்பதற்கும், போலியான குற்ற ஒப்புதல்களைப் பெறுவதற்கும் இந்தப் பயங்கரமான சட்டத்தினைப் பயன்படுத்தி வருகின்றன.

குறிப்பாக 2022 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்ட சிங்கள இளைஞர்கள் இப்பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டனர்.

இதனையடுத்து பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் எனக் கோரி 2022 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நாடு தழுவிய கையொப்ப பிரசாரத்துக்கு நானும், சுமந்திரனும் தலைமை தாங்கினோம்.

இப் பிரசாரத்துக்கு நாடு முழுவதும் இருந்து பிரஜைகளும் செயற்பாட்டாளர்களும் பொதுஜன பெரமுன தவிர்ந்த சகல அரசியல் கட்சிகளும் ஆதரவு வழங்கிருந்தன. எனினும் இதனை நீக்குவதற்கு இலங்கை அரசு தவறிவிட்டது.

இதேவேளை, சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கனேடிய பிரதிநிதிகள், கடந்த ஆண்டு போராட்டக்காரர்களை தடுத்து வைக்க இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தியமை குறித்து தமது கவலையை வெளிப்படுத்தினர்.

எவ்வாறாயினும், கடந்த ஆண்டு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் அபிவிருத்தி குறித்து கவலையடைவதாகவும் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கான நடைமுறைத் தடை குறித்து சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரசாங்கம் உத்தரவாதம் வழங்கியுள்ளதாகவும் பகிரங்கமாகக் கூறியது. ஆனால் அதனை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தியதா?

இருப்பினும் இதுபோன்ற உறுதிமொழிகள் வெளிப்படையாக இருந்தும். கடந்த மாதம் நினைவேந்தல் தின நிகழ்வுகளில் கலந்துகொண்ட ஒன்பது பேரை போலீசார் கைது செய்துள்ளனர். மேலும் அவர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். எனவே நாட்டிற்குள் நல்லிணக்கம், மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பற்றிப் பேசி சர்வதேச சமூகத்தையும் மனித உரிமைகள் பேரவையையும் தவறாக வழிநடத்த அரசாங்கம் முயல்கிறதா?"-என்றார்.

# வெற்றி பெறக்கூடிய வேட்பாளரை பெரமுன சார்பில் நிறுத்தத் தயார்!

## கூறுகின்றார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, டிசெ. 07

அடுத்த வருடம் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் வெற்றி பெறும் வேட்பாளர் ஒருவரை தங்கள் கட்சி சார்பில் முன் நிறுத்த தயாராக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



அடுத்த வருடம் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் கட்சி என்ற ரீதியில் நாங்கள் அதற்கு தயாராகவே இருக்கின்றோம்.

வெற்றி பெறும் வேட்பாளர் ஒருவரை எங்கள் கட்சி சார்பில் நாங்கள் முன்நிறுத்துவோம்.

வேட்பாளராக நிறையப் பேர் இருக்கின்றார்கள். அதிக எதிர்ப்பார்ப்பும் காணப்படுகின்றது.

விவசாயிகள், வியாபாரிகள், அரசியல்வாதிகள் ஜனாதிபதிகள் எனப் பலர் எமது கட்சியுடன் இணைந்து இருக்கின்றார்கள்.

தற்போதுள்ள ஜனாதிபதியை எதிர்வரும் தேர்தல் வரையில் ஜனாதிபதியாக நாங்கள் நியமித்தோம்.

ஆனால் எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிப்போமா என்பது பற்றி தெளிவுபடுத்த முடியாது. கட்சி என்ற ரீதியில் ஒரு கட்சியுடனேயே கலந்துரையாடல்களை முன்னெடுக்க முடியும்.

தனிநபரை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் கலந்துரையாடல்களை முன்னெடுக்க முடியாது.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிக்கின்றோம் ஆனால் எதிர்காலத்தில் பயணிப்பது தொடர்பில் கட்சியுடன் கலந்துரையாடிய பின்னரே தீர்மானிக்க முடியும்.

தாங்கள் வெற்றிபெறும் சூழல் இருக்கும் போது தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று நினைத்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது-என்றார்.

# பிறப்புச் சான்றிதழில் மாற்றம்!

கொழும்பு, டிசெ. 07

இலத்திரனியல் மக்கள் தொகை பதிவேடு வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய டிஜிற்றல் பிறப்புச் சான்றிதழ் வெளியிடும் நிகழ்வு உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தலைமையில் நேற்று இடம்பெற்றது.



களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த தேசிய டிஜிற்றல் பிறப்பு சான்றிதழ் வேலைத்திட்டம் ஏனைய மாவட்டங்களுக்கும் துரிதமாக விரிவுபடுத்தப்படும் என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.

டிஜிற்றல் தொழில்நுட்பத்துடன் சர்வதேச தரத்திற்கமைய இந்த தேசிய பிறப்புச் சான்றிதழுக்கு வழங்கப்படும் இலக்கமானது தேசிய அடையாள அட்டை இலக்கங்களாக மாற்றப்படும் என இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

ஒரு குழந்தை பிறக்கும் போதே அடையாள எண்ணைக் கொடுப்பதன் மூலம் மக்கள் தொகைப் பதிவேட்டை உருவாக்குவதற்கு இலகுவாக அமையும்.

இந்த புதிய தேசிய பிறப்புச் சான்றிதழில் பிறந்த இடம் பற்றிய தகவல்கள், உரித்துடையவரின் இலக்கம், முழுப் பெயர், தந்தையின் தேசிய அடையாள இலக்கம், தாயின் தேசிய அடையாள இலக்கம், வழங்கப்படும் சான்றிதழின் சிறப்பு அம்சங்கள், பதிவாளர் நாயகரின் கையொப்பம், சான்றிதழ் உரித்துடையவரின் இனம், பெற்றோரின் திருமணமான மற்றும் திருமணமாகாத நிலையை விளக்குதல்,

இந்த பிறப்புச் சான்றிதழை சிங்களம், ஆங்கிலம் அல்லது தமிழ்மொழிகளில் பெறலாம்.

சான்றிதழில் உள்ள தகவல்கள் திருத்தப்பட்டால், சரியான தகவல்களை மட்டும் கொண்ட புதிய சான்றிதழ் வழங்குதல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (அ)

# பொலிஸ் உத்தியோகத்தர் நெடுஞ்சாலையில் உயிர்மாய்ப்பு!

கொழும்பு, டிசெ. 07

பேலியகொடை அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் இரவு கடமையில் ஈடுபட்டிருந்த உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கொழும்பு வெளிவட்ட வீதியில் உள்ள பேலியகொடை பரிமாற்று நிலையத்தில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் தனது கடமை துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துக்கொண்டார்.

54 வயதான உப பொலிஸ் பரிசோதகரான ருவன் குமார என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்று முன் தினம் காலை 5 மணியளவில் தனது கடமைகளை முடித்துக் கொண்டு பேலியகொடை பரிமாற்று நிலையத்திற்கு வந்தபோதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மாற்றத்தை மேற்கொள்வதற்கு பாராளுமன்றம் ஒத்திவைப்பு?

## ஜனாதிபதி ஆலோசனை என தகவல்

கொழும்பு, டிசெ. 07

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வருடம் ஜனவரி மாதத்தின் நடுப்பகுதியில் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பது குறித்து ஆலோசிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிகபட்சமாக இரண்டு மாதங்களுக்கு பாராளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைக்கலாம் என்றும் அந்த பிரகடனத்தில், மீண்டும் கூடுவதற்கான திகதி அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசியலமைப்பின் 33 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி அரசாங்கக் கொள்கை அறிக்கையை வெளியிட அரசியலமைப்பின் கீழ் அவருக்கு அதிகாரம் உள்ளது.

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதன் பின்னர் பொது நிறுவனங்கள் பற்றிய குழு மற்றும் பொதுக் கணக்குகளுக்கான குழு உள்ளிட்ட குழுக்களின் செயல்பாடும் நிறுத்தப்படும்.

அண்மையில் குற்றச்சாட்டை எதிர்கொண்ட கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டாரவுக்கு பதிலாக புதிய தலைவரை நியமிப்பதற்கு வழிவகை செய்வதே இந்த ஒத்திவைப்பு என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கிரிக்கெட் இடைக்காலக் குழுவுக்கு எதிரான மனு மீதான விசாரணை 13ஆம் திகதியன்று

கொழும்பு, டிசெ. 07

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் இலங்கை கிரிகெட் இடைக்கால கட்டுப்பாட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் 13 ஆம் திகதி பரிசீலனை செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் இலங்கை கிரிக்கெட் இடைக்கால கட்டுப்பாட்டு குழு நியமிக்கப்பட்டமைக்கு எதிராக இலங்கை கிரிக்கெட் சபை மனுவொன்றைத் தாக்கல் செய்யது.

இந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் தமது கட்சிக்காரரின் நிலைப்பாட்டை அறிவிப்பதற்கு கால அவகாசம் தேவை என நீதிமன்றில் தெரிவித்தார்.

இதற்கமைவாக வழக்கு விசாரணையை எதிர்வரும் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த விசாரணை நடத்தப்படும் வரையில் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ நீதிமன்றில் உறுதியளித்துள்ளார்.

# நாட்டில் பிறப்பு வீதம் குறைவு!

கொழும்பு, டிசெ. 07

இலங்கையில் பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளதால் பாடசாலைக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 48 ஆயிரம்வரை குறைவடைந்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே கல்வி அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

“ஐந்து வயது பூர்த்தியானதும் பாடசாலைக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தற்போது 2 லட்சத்து 92 ஆயிரமாக காணப்படுகின்றது.

இற்றைக்கு 10 வருடங்களுக்கு முன்னர் இந்த எண்ணிக்கை 3 லட்சத்து 40 ஆயிரமாக காணப்பட்டது.” - எனவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# தீர்வின்றேல் தொடர்ந்தும் தொழிற்சங்க நடவடிக்கை

## ஜோசப் ஸ்ராலின் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 07

சம்பளம் உள்ளிட்ட பிரச்னைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் தொடர்ந்தும் தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.



பாராளுமன்ற வளாகத்திற்கு முன்பாக உள்ள பத்தரமுல்லை - பொல்துவ சந்தியில் ஆசிரியர் சங்கங்களினால் பாரிய போராட்டமொன்று நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

120 நாட்கள் போராட்டத்தில் நாங்கள் முன்வைத்த 3 கோரிக்கைகளில் ஒரு கோரிக்கை மட்டுமே நிறைவேற்றப்பட்டது.

இந்த வருடம் பணம் இல்லை அடுத்த வருடம் பார்ப்போம் என்று கல்வி அமைச்சர் கூறுகின்றார்.

அடுத்த வருடம் நீங்கள் இருக்கப்போவதில்லை. உங்களை நாங்கள் வீட்டுக்கு அனுப்புவோம்.

கல்வித்துறை வீழ்ச்சயடைந்துள்ளது. ஆகவே இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேலதிக நிதித்தொகையை கல்வித் துறைக்காக ஒதுக்க வேண்டும்.

இதன்மூலம் அதிபர் ஆசிரியர் சம்பள பிரச்னை தீர்க்கப்பட வேண்டும்.

அவ்வாறு தீர்வு வழங்கப்படாவிட்டால் நாங்கள் தொடர்ந்தும் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்போம்-என்றார். (அ)

# பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படவுள்ளதா?

## எதிர்க்கட்சியின் கேள்விக்கு பதில் வழங்காத சபாநாயகர்

கொழும்பு, டிசெ. 07

**பாராளுமன்ற நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருவதாக வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் சபாநாயகரிடம் நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.**

எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்லவினால் இந்த கேள்வி எழுப்பப்பட்டது.

முக்கியமான கேள்விகளுக்கு பதில் வழங்கப்படாமல் இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தை இடைநிறுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் கூறினார்.

இருப்பினும் சபாநாயகரினால் எந்தவொரு பதிலும் வழங்கப்படாத நிலையில் சபை நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் நிலையியற் கட்டளையின் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியதுடன், அதற்கு பதிலளிப்பதற்கு கால அவகாசம் வழங்குமாறு சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த கோரினார். (அ)

# நீதிபதிகள் தொடர்பில் சபையில் வாக்குவாதம்

கொழும்பு, டிசெ. 07

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் நீதிபதியொருவர் தொடர்பில் தெரிவித்த கருத்து தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பிட்ட நீதிபதி ஒருவரை இழிவுபடுத்தியதாக அமைச்சர் ராஜபக்ஷ தெரிவித்த கருத்து தொடர்பில் கருத்து தெரிவித்த ரிஷாத் பதியுதீன் ஒரு நாள் குறிப்பிட்ட நீதிபதியை நான் சபித்தேன் என அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறினார். நான் யாரையும் சபிக்கவில்லை என சொல்ல வேண்டும். தவிர நீதிபதியின் பெயரையும் குறிப்பிடவில்லை. அத்துடன், முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க, நீதிபதி ஒருவருக்கு எதிராக கருத்து வெளியிடும்போது, அமைச்சர் அதனை ஒருபோதும் எதிர்க்கவில்லை-என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, ரிஷாத் பதியுதீன் 'ஒரு முஸ்லிம் நீதிபதி' என்ற வார்த்தையைப் பயன்படுத்தும்போது நிச்சயமாக குறிப்பிட்ட நீதிபதியையே குறிப்பிட்டார்.மேலும், இலங்கை கிரிக்கெட் அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்யக் கொண்டு வரப்பட்ட பிரேரணை மீதான விவாதத்தின்போது முழு பாராளுமன்றமும் அமைச்சர் ரொஷான் ரணசிங்கவை விமர்சித்ததை நான் அவருக்கு நினைவுபடுத்த வேண்டும்-என தெரிவித்தார். (அ)

# சுற்றுலாப் பயணி மீது பாலியல் வன்கொடுமை

## அப்புத்தளையில் தேரர் கைது

கொழும்பு, டிசெ. 07

அப்புத்தளை மாகிரிபுர பிரதேசத்தில் உள்ள விகாரையில் 17 வயதுடைய தேரர் ஒருவர் வெளிநாட்டு சுற்றுலாப் பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

அப்புத்தளை-வெலிமடை வீதியில் உள்ள மகிரிபுர பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரைக்கு வருகை தந்த 26 வயதான போலந்து நாட்டை சேர்ந்த பெண் ஒருவரே சந்தேக நபரான தேரர் தன்னை துஷ்பிரயோகம் செய்ததாக முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

விசாரணையின் பிரகாரம் சந்தேக நபரான தேரர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபஹனவின் ஆலோசனையின் பேரில் அப்புத்தளை பொலிஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# டெங்கு நோய் தாண்டவம்!

## கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 07

மழை காலத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றமையை கருத்தில் கொண்டு அதனை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உரிய தரப்புக்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவுடன், சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க ஆகியோர் தலைமையில் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு அறிவுறுத்தல் வழங்கினார்.

கொழும்பு, கம்பஹா, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவட்டங்களில் டெங்கு நோய்ப் பரவல் அதிகரித்து வருவதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டதோடு, அரச நிறுவனங்கள், படகு துறைகள், பாடசாலைகள் போன்ற பொது இடங்களில் குடம்பிகள் பெருக்கம் அதிகரித்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த நிலைமையை கட்டுப்படுத்த முப்படையினரின் உதவியுடன் விரைவான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சாகல ரத்நாயக்க பொலிசாருக்கு அறிவிறுத்தினார்.

நோய்ப் பரவலை கட்டுப்படுத்துவதற்கு அவசியமான விரைவான நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்க நிறுவனங்களை அறிவுறுத்தும் வகையில் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து அறிவிப்பொன்றை விடுக்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அதேபோல் பொலிஸார் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியன இணைத்து இது தொடர்பில் மக்களை தெளிவுபடுத்துவதற்கான விரைவான வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்றும் சாகல ரத்நாயக்க அறிவுறுத்தினார்.

இந்தச் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை ஆராய்வதற்கான டெங்கு ஒழிப்பு பிரிவை மீண்டும் கூட்டவும் தீர்மானிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (ஓய்வு) ஜெனரல் கமல் குணரத்ன, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளிட்டவர்களும் சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு, கொழும்பு மாநகர சபையின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

# மலேசியாவுக்கு சிறுவர்கள் கடத்தல் பூர்வாங்க விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 07

மலேசியாவுக்கு இந்தியா வழியாக இலங்கை சிறுவர்களை கடத்தும் மனித கடத்தல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அறிவித்தது.

குறித்த மனித கடத்தலில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 5 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட 28 சிறுவர்கள் இலங்கையிலிருந்து மலேசியாவுக்குக் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகவும், இந்தக் குழந்தைகள் நாடு திரும்பவில்லை எனவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்தது.

இந்த சம்பவம் தொடர்பான முறைப்பாடு கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி சந்திம மனுஜ முனசிங்கவினால் குற்றப் புலனாய்வு மற்றும் ஆட்கடத்தல் புலனாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

முறைப்பாட்டாளர் தமது திணைக்களத்திற்கு வந்து சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்கியதாகவும், இது தொடர்பில் பிரித்தானிய தூதரகத்திடம் இருந்தும் தங்களுக்கு மின்னஞ்சல் செய்தி வந்துள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

மின்னஞ்சல் செய்தியின் தரவுகளின்படி, நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 5 முதல் 17 வயதுக்குட்பட்ட 28 சிறுவர்கள் தாய்மார்களுடன் அல்லது தனியாக நாட்டைவிட்டு வெளியேறி இந்தியாவுக்குச் சென்றுள்ளனர். தாய்மார்கள் மட்டுமே நாடு திரும்பினர் என மனுதாரர் கூறினார்.

இந்தியாவில் இருந்து மலேசியா செல்லும் குழந்தைகளை மலேசிய பெண் ஒருவர், அந்நாட்டு குடிவரவு-குடியகல்வுக் கட்டுப்பாட்டாளரிடம் பொய்யான ஆவணங்களைச் சமர்ப்பித்து அழைத்துச் செல்வதாக தகவல் வெளியாகியுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

குடிவரவு திணைக்களத்தினால் விமான நிலையத்தில் வைத்துள்ள படிவத்தை ஒருவர் வெளிநாட்டுக்கு அனுப்பிய போது பூர்த்தி செய்ததாக தகவல் வெளியாகியுள்ளதுடன், அந்த நபர் குறித்த தகவல்களை பெற்றுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. (அ)

# சமாதான செய்தி எடுத்து செல்லும் பயணம் நல்லூரை வந்தடைந்தது!

யாழ்ப்பாணம், டிசெ. 07

சமாதானத்தின் செய்தியை தலதா மாளிகையிலிருந்து நல்லூர் நோக்கி எடுத்துச் செல்லும் பயணம் 100 இளைஞர் அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டது.

சர்வமதத் தலைவர்களின் ஆதரவுடன் ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் உள்ளிட்ட 100 இளைஞர்கள் அமைப்புக்கள் கண்டி தலதா மாளிகை தொடக்கம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வரை உள்ள சர்வமத தலைவர்களுக்கு சமாதானத்தின் செய்தி மற்றும் கோரிக்கைகளை முன்வைத்தல் வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கண்டி தலதா மாளிகை மற்றும் கண்டி சிறீ நாட்ட தேவாலத்திற்கருகாமையில் இந்த செயற்திட்டத்தை ஆரம்பித்த இளைஞர்கள் நேற்று முன் தினம் பிற்பகல் நல்லூர் கந்தசுவாமி



ஆலயத்தை வந்தடைந்தனர்.

அன்பிற்கும் நட்புக்குமான வலையமைப்பின் ஏற்பாட்டில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 13வயது சிறுவன் சடலமாக மீட்பு!

## மதரஸா நிர்வாகி கைது! சாய்ந்தமருது பகுதியில் சம்பவம்!!

அம்பாறை, டிசெ. 07

**13 வயது மாணவன் தூக்கில் தொங்கிய நிலையில் மலசல கூடத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.**

**அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சந்தை வீதியில் அமைந்துள்ள 3 மாடி கட்டடம் ஒன்றில் நடாத்தப்படும் மத்ரஸா ஒன்றில் நேற்று முன் தினம் இரவு மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பகுதியை சேர்ந்த எம்.எஸ். முஸ்அப் (வயது-13) எனும் கல்வி கற்று வந்த மாணவனே தூக்கில் தொங்கி உயிரிழந்த நிலையில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.**

மத்ரஸாவில் மஹ்ரீப் தொழுகைக்கு ஏனைய மாணவர்கள் கலந்து கொண்ட நிலையில் மரணமடைந்த மாணவன் அங்கு காணப்படாததன் காரணமாக சில மாணவர்கள் தேடிய நிலையில் மலசல கூடத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் அம்மாணவன் மீட்கப்பட்டு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மரணமடைந்த மாணவனின் பெற்றோர் உறவினர்கள் தூக்கில் தொங்குவதற்கு எமது பிள்ளை கோழையல்ல எனவும் ஏதோ ஒன்று நடைபெற்றுள்ளதை ஊகிக்க முடிவதாகவும் முறையான விசாரணை அவசியம் என கேட்டுக்கொண்டனர்.

இதனை அடுத்து மத்ரஸா மாணவனின் மரணத்தில் சந்தேகம் என குறித்த மத்ரஸாவினை சுற்றி பொதுமக்கள் குவிந்தமையினால் சாய்ந்தமருது பொலிஸ் பொறுப்பதிகாரி சம்சுதீன் தலைமையிலான பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று நிலைமையை கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர்.

மேலும் குறித்த மாணவனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பொதுமக்கள் ஒன்று கூடி குறிப்பிட்ட மதர்ஸாவின் நிர்வாகி மீது தாக்குதல் மேற்கொள்ள தயாராகிய வேளை மேலதிக பொலிஸார் அவ்விடத்திற்கு அழைக்கப்பட்ட நிலையில் சாய்ந்தமருது பொலிஸாரால் மதரஸா நிர்வாகியாகிய மௌலவி கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார்.

இது தவிர குறிப்பிட்ட மதர்ஸாவின் நிர்வாகி மீது ஏற்கனவே பல பொலிஸ் முறைப்பாடுகள் இருப்பதாகவும் மாணவனின் மரணம் தற்கொலையல்ல என கூறி பொதுமக்கள் குழப்பத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த 15 வயது சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் கடந்த சனிக்கிழமை சந்தேகத்தில் கல்முனை தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பெண்ணை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

(அ)

# மாகாண ஆணையாளர் பாராட்டி கௌரவிப்பு

அம்பாறை, டிசெ. 07

கடந்த 13 வருடங்களாக, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளராக கடமையாற்றி வருகின்ற மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதரின் சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு ஏறாவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

ஏறாவூர் மாவட்ட ஆயுள்வேத நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கௌரவிப்பு நிகழ்வு, வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.எஸ்.எம்.லாபீர் தலைமையில் இடம்பெற்றபோது, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதரின் சேவைகளைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில், ஏறாவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (அ)

# மட்டக்களப்பு மேற்கில் மாணவர் பாராளுமன்றம்

## காரில் வந்திறங்கிய அமைச்சர்கள்





மட்டக்களப்பு, டிசெ. 07

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் வலய மட்ட மாணவர் பாராளுமன்ற அமர்வு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கன்னன்குடா மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களை கொண்டு வலயமட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை வைத்து அமைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வே நேற்று முன் தினம் நடைபெற்றது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சபாநாயகர், குழுத்தலைவர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பதவி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முதலாவது அமர்வின்போது, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் தமது கார்களில் வந்திறங்கி சபையில் அமர்ந்ததை தொடர்ந்து சாபாநாயகர் செங்கோலுடன் அழைத்துவரப்பட்டு சபை அமர்வு ஆரம்பமானது.

இதன்போது, சபாநாயகர் தனது தொடக்க உரையை மும்மொழிகளிலும் நிகழ்த்தியிருந்தார். அவரைத் தொடர்ந்து பிரதமர் ஆங்கிலத்தில் உரையாற்றினார். ஏனைய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் தமது அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தனர்.

இச்சபையில், ஆண்களின் எண்ணிக்கையை விட பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தமையை காணமுடிந்தது. இது எடுத்துக்காட்டத்தக்கது.

செயலாளர் நாயகமாக மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் பதவி வகித்தமையுடன், பிரதிச்செயலாளர்களாக வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் பதவி வகித்தனர்.

இவ்வமர்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் கலந்து கொண்டார். (அ)

# சந்திவெளியில் வெளியேற்றப்பட்ட 380 குடும்பங்களை மீளக்குடியேறவிடாது மட்டு. பொலிஸார் அச்சுறுத்தல்!

மட்டக்களப்பு, டிசெ. 07

மட்டக்களப்பு சந்திவெளி பகுதியில் குடியேறி வெளியேற்றப்பட்ட 380 குடும்பங்களையும் மீண்டும் அங்கு குடியேறுமாறு நீதிமன்றம் தீர்ப்பளித்தபோதும் அந்த சட்டவிரோதமாக காணியை கையடக்கியவர் பொலிசாருடன் இனைந்து அச்சுறுத்தி வருவதகவும் நீதிமன்ற தீர்ப்பை மீறி பொலிஸார் அராஜகம் இடம்பெற்று வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

குறித்த காணிப் பகுதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் பாதிக்கப்பட்ட மக்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

சந்திவெளி பொலிஸ் பிரிவிலுள்ள பாலையடி தோனா ஜீவ நகர் பகுதியில் கடந்த 3 வருடங்களுக்கு மேலாக காணி இல்லாத 380 குடும்பங்களைச் சேர்ந்த வறிய மக்கள் அந்த பகுதியிலுள்ள காணியின் பற்றைக் காட்டை வெட்டி துப்பரவு செய்து குடில் அமைத்து அதில் தங்கி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவந்தோம்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அந்த பகுதியைச் சேர்ந்த காதர் என்றழைக்கப்படும் காணி மாபியாவைச் சேர்ந்தவர், அது தனது காணி என போலி ஆவணத்தை தயாரித்து அங்கு குடியேறியவர்களை சந்திவெளிப் பொலிஸாருடன் இணைந்து குடிசைகளை தீவைத்து வேலிகளை பிடிங்கி வெளியேற்றியதுடன் சிலரை பொலிஸ் அதிகாரத்தினால் கஞ்சாவை வைத்து மற்றும் குற்றச்சாட்டில் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தி விளக்கமறியல்வைத்து அவர்களை அச்சுறுத்தி வந்தனர்.

இதனையடுத்து பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவிடம் சந்திவெளி பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு செய்தனர்.

இதேவேளை, இந்த காணி தனது எனவும் அவகுறியேறியவர்களை வெளியேற்றுமாறு காணி மாபியா காதர் பொலிஸாரிடம் கோரிய நிலையில் குறித்த பிரச்னை தொடர்பாக பொலிஸார் குறியேறியவர்களுக் எதிராக ஏறாவூர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கின் மக்களாகிய எங்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி பிறேம்நாத் ஆஜராகிய நிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்தபோது இந்த காணியை உரிமை கோருபவருக்கு சொந்தமானது அல்ல எனவும் வெளியேறியவர்களை மீளக்குடியேறுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது தீர்ப்பளித்தது.

நீதிமன்ற தீர்ப்பின் பின்னரும் பொலிஸார் குறித்த காணியில் மீண்டும் துப்பரவுப் பணிகளில் ஈடுபட்டவர்களை கைது செய்வது அச்சுறுத்துவது போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் தொடர்ச்சியாக பொலிஸார் காணி மாபியாவுடன் சேர்ந்து மீண்டும் குடிசைகளை பைக்கோ வாகனத்தினால் உடைத்து தள்ளி அராஜகம் செய்தனர்.

இது தொடர்பாக ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிரேஷ்ட சட்டத்தரணி பிறேம்நாத் முன்நகர்வு விண்ணப்பபத்திரம் தாக்கல் செய்ததையடுத்து வழக்கு விசாரணைக்கு எடுத்த நீதவான் பொலிஸாரின் இந்த செயற்பாட்டை கண்டித்ததுடன் அந்த காணிப் பகுதிக்கு பொலிஸார் செல்லக்கூடாது எனவும் அதில் வெளியேற்றப்பட்ட மக்கள் குடியேறுமாறும் நான்காவது தடவையாக தீர்ப்பளித்தார்.

இருந்தபோதும் நீதிமன்ற தீர்ப்பை மீறி மீண்டும் சந்திவெளி பொலிசார் காணி மாபியாவுடன் இணைந்து அராஜகம் செய்வார்கள் என அச்சமடைந்துள்ளோம்-என்றார். (அ)

# பணயக் கைதிகளில் பல பெண்கள் பாலியல் வன்புணர்வுக்குள்ளாகினர்!

## ஹமாஸ் தரப்பினர் மீது குற்றச்சாட்டு

**டெல் அவிவ், டிசெ. 07**

**ஹமாஸ் தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பணயக் கைதிகளில் பல பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**



பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் விடுவிக்கப்பட்ட பல பெண்கள் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில் குறித்த செயற்பாட்டுக்கு எதிராக சர்வதேச சமூகத்தினர் குரல் எழுப்ப வேண்டும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயத்தில் தலையீடு செய்யுமாறு பெண்கள் உரிமை அமைப்புகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் என்பவற்றுக்கு தாம் அழைப்பு விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காசாவில் உள்ள கான் யூனிஸ் நகரின் மத்திய பகுதியை தங்களது தரப்பு ஆக்கிரமித்துள்ளதாக இஸ்ரேல் இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

ஹமாஸ் தரப்பினருக்கு எதிரான தரைவழி தாக்குதல்கள் ஆரம்பித்தமையில் இருந்து இது மிகவும் தீவிரமான நாள் என இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

இந்தநிலையில் இரு தரப்பினருக்கும் இடையிலான போர் மீண்டும் ஆரம்பித்துள்ளமை காசாவில் உணவு நெருக்கடியை தீவிரப்படுத்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு திட்டம் குறிப்பிட்டுள்ளது.

(அ)



# இடம்பெயர்ந்து வாழும் மக்களையும் வெளியேறுமாறு இஸ்ரேல் எச்சரிக்கை

## போக வழியின்றி அவதிப்படும் மக்கள்

ஜெருசலேம், டிசெ. 07

காஸாவில் அமைந்துள்ள தங்குமிடங்கள் மற்றும் பாடசாலைகளில் இடம்பெயர்ந்துள்ள மக்களை உடனடியாக வெளியேற்ற இஸ்ரேல் இராணுவம் எச்சரித்துள்ளது.

ஹமாஸூக்கு எதிராக இஸ்ரேலிய இராணுவம் முழு சக்தியுடன் செயற்பட்டு வருவதாகவும் இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது.

இந்நிலையில் எகிப்திற்குள் நுழைதே பாலஸ்தீனியர்களுக்கு சாத்தியமான வழி என்றும் தற்போதைய சூழ்நிலையில் இது மிகவும் கடினமானது என்றும் கூறப்படுகின்றது.

கடந்த இரண்டு நாட்களாக ரஃபா எல்லை மூடப்பட்டுள்ள அதேநேரம் முறையான ஆவணங்கள் இருப்பவர்கள் கூட எகிப்திற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

1.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் முதலில் காஸாவின் மத்திய பகுதிக்கும் பின்னர் கான் யூனிஸ்க்கும் தற்போது ரஃபாவிற்கும் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். (அ)

# பிறப்பு விகிதத்தை அதிகரிக்கப் பங்களிக்குமாறு வடகொரிய பெண்களிடம் கிம் ஜோங் கோரிக்கை

பியொங்யாங், டிசெ. 07

சிசு பிறப்பு விகிதத்தை அதிகரிக்க பங்களிக்குமாறு அந்நாட்டு பெண்களிடம் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதன்போது, வடகொரிய தலைவர் அழுததாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வடகொரியாவின் தலைநகர் பியோங்யாங்கில் நடைபெற்ற தேசிய தாய்மார்கள் மாநாட்டில் வடகொரிய ஜனாதிபதி, இவ்வாறு கருத்து தெரிவித்த போது ஆயிரக்கணக்கான வடகொரிய பெண்கள் மத்தியில் அழுதுள்ளார்.



எனினும், இது வெறும் நாடகம் என சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

வடகொரியாவில் குறைந்து வரும் பிறப்பு விகிதத்தை உயர்த்துவதும், நல்ல குழந்தைப் பருவ வளர்ச்சியை வழங்குவதும் ஜனாதிபதியாக தனது கடமை என்று கிம் ஜாங் உன் தெரிவித்தார்.

# அமெ. உதவியை ஒத்திவைத்தால் போரை இழக்கும் மிகப்பெரிய ஆபத்தை எதிர்கொள்கிறது உக்ரைன்!

கீவ், டிசெ. 07

காங்கிரசில் விவாதிக்கப்படும் உக்ரைனுக்கான அமெரிக்க உதவியை ஒத்திவைப்பது ரஷ்யாவுடனான போரில் உக்ரைனின் தோல்வியை மேலும் ஆபத்தில் கொண்டு சேர்க்கும் என உக்ரைன் ஜனாதிபதியின் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுடனான உக்ரைனின் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் உதவிகள் குறைந்து வருவதால் எதிர்காலம் குறித்து நிச்சயமற்ற தன்மை நிலவும் நிலையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.



ரஷ்யாவிற்கு எதிரான போரில் உக்ரைனுக்கு உதவுவதற்கு அமெரிக்காவுக்கு நேரமும் பணமும் இல்லாமல் போய்விட்டதாக வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

(அ)



# பஸ் விபத்தில் 12 பேர் பலி!

நியூயோர்க், டிசெ. 07

ஹொண்டுரஸ் நாட்டில் இருந்து சுமார் 60 பேரை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று டெகுசிகல்பாவில் விபத்திற்குள்ளானதில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் குறித்த பேருந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், குறித்த விபத்தில் 20 இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்த நிலையில் டெகுசிகல்பா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்தநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

(அ)

# தெற்கு ஜேர்மனியில் கடும் பனிப்பொழிவு

பேர்ளின், டிசெ. 07

தெற்கு ஜெர்மனியில் கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

இதனால் அந்நாட்டில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விமான நிலைங்கள் மூடப்பட்டுள்ள நிலையில், இதனால் விமான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

அத்துடன் ரயில் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளன.

இதன் காரணமாக அங்கு நடைபெற திட்டமிடப்பட்டிருந்த பல போட்டிகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்களை வீட்டிற்குள்ளே இருக்குமாறு அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



பனிப்பொழிவு மற்றும் குறைந்த வெப்பநிலை ஆகியவற்றால் ஜெர்மனியின் பல பகுதிகளில் உள்ள மக்கள் கடந்த சில நாட்களாக சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# மத்தள விமான நிலையம் இந்தியாவிடம் ஒப்படைப்பு!

கொழும்பு, டிசெ. 07

**அம்பாந்தோட்டை - மத்தள சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகளை ரஷ்ய- இந்திய கூட்டு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே. டி.எஸ்.ருவன் சந்திர தெரிவித்தார்.**

அதற்கமைய, எதிர்வரும் நாட்களில் குறித்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் மத்தள விமான நிலையத்தின் அனைத்து நடவடிக்கைகளும் குறித்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

அங்கு பணியாற்றும் விமான நிலைய ஊழியர்களுக்கான சம்பளமும் அந்த நிறுவனத்தின் ஊடாக வழங்கத் திட்டமிட்டுள்ளது

மேலும் இந்த திட்டத்தினூடாக ஈட்டப்படும் வருமானத்தின் ஒரு பகுதி, அரசுக்கு சொந்தமாகும் எனவும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.




மத்தள சர்வதேச விமான நிலையத்தை பராமரிப்பதற்காக அரசாங்கம் வருடாந்தம் 2 ஆயிரம் மில்லியன் ரூபாவை செலவிடுவதாகவும், புதிய வேலைத் திட்டத்தின் மூலம் அந்த தொகையை சேமிக்க முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(அ)

# மருத்துவப் பொருட்களுக்கு வரி அறவிடுதல் அசாதாரணமானது

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 07

போசாக்கான உணவுகள், உரங்கள் மற்றும் மருத்துவப் பொருட்களுக்கு வரி விதிக்கப் பட்டுள்ளமையானது அரசாங்கத்தின் மிகவும் அசாதாரண செயல் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரி வருமானம் அத்தியாவசியம் என்று அரசாங்கம் கூறுகின்றது. ஆனாலும் வரி அறவிடும் முறையில் சாதாரணத் தன்மை ஒன்று இருக்க வேண்டும் என்று நாங்கள் கூறினோம்.

பிரதானமாக பிள்ளைகளின் போசாக்கிற்கு தேவையான உணவு வகைகளுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது.

உரங்களுக்கு வரி விதிக்கப் பட்டுள்ளது. டீசலுக்கும் வரி விதிக்கப்பட்டுள்ளது. விவசாயத்தில் ஈடுப்படுவர்களுக்கான டீசல் மற்றும் உரங்களை கட்டாயமாக இறக்குமதி செய்யவேண்டும்.

அடுத்ததாக மருத்துவ பொருட்களுக்கு வரி விதிக்கப் பட்டுள்ளது. அரச மருத்துவ னைகளுக்கு பொருட்கள் கொண்டு வரப்படும் போது அதற்கான முழுச் செலவையும் அரசாங்கம் ஏற்கும்.

தனியார் மருத்துவனைகளுக்கு பணக்காரர், ஏழைகள் என அனைவரும் செல்கின்றார்கள்.

மருத்துவ உபகரணங்கள் இல்லாமையால் அரச மருத்துவனைகளில் அதிகமான பரிசோதனைகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஆகவே தனியார் மருத்துவனைகளிலேயே பரிசோதனைகளை செய்ய வேண்டிய சூழல் காணப்படுகின்றது.

இவ்வாறான சூழலில் குறித்த மருத்துவ பொருட்களுக்கு வரி அறவிடுதல் மிகவும் அசாதாரணமாக விடயம்-என்றார்.

(அ)

# கரிகால் சோழன் விருதுகள் பெற்ற இலங்கை-ஆஸி. எழுத்தாளர்கள்



சென்னை, டிசெ. 07

தமிழ்நாடு தஞ்சாவூர் பல்கலைக் கழகத்தின் அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறையில், சிங்கப்பூர் முஸ்தபா அறக்கட்டளை நிறுவியுள்ள தமிழவேள் கோ. சாரங்கபாணி இருக்கை வாயிலாக வழங்கப்படும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளைச்சேர்ந்த இலக்கியப்படைப் பாளிகளுக்கான கரிகாற்சோழன் விருதுகள்

வழங்கும் விழா கடந்த 05 ஆம் திகதி நடைபெற்றது.

இம்முறை இந்த விருதுகள் இலங்கையரான , தற்போது அவுஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர் - விலங்கு மருத்துவர் நோயல் நடேசன் எழுதிய பண்ணையில் ஒரு மிருகம் நாவலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை எழுத்தாளர் சிவஆரூரன் எழுதியுள்ள ஆதுரசாலை என்ற நாவலுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

சான்றிதழும் தங்கப்பதக்கமும் குறிப்பிட்ட எழுத்தாளர்கள் பெற்றுள்ளனர்.

நோயல் நடேசன், சிறுகதை, நாவல், பயண இலக்கியம் மற்றும் விலங்கு மருத்துவம் தொடர்பான அபுனைவு படைப்புகள் பலவும் எழுதியிருப்பவர். இவரது சில நூல்கள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வெளிவந்துள்ளன.

சிவ. ஆரூரன் சில வருடங்கள் இலங்கை சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டு, பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டவர்.

சிறையிலிருந்தவாறே இலக்கியப்பிரதிகள் எழுதியிருக்கும் சிவஆரூரனின் ஆதுரசாலை நாவலுக்கு இலங்கையில் தேசிய சாகித்திய விருதும் கிடைத்திருக்கிறது.

(அ)

# 13ஆவது திருத்த சட்டம்தான் தீர்வை நோக்கிய ஆரம்பப்படி என்பது நிதர்சனமாகி வருகின்றது

## ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் தெரிவிப்பு

வடமராட்சி, டிசெ. 07

அழிந்துபோயிருந்த 13 ஆவது திருத்தச்சட்டம் பேசாப்பொருளாகியிருந்த நிலையிலும் தொடர்ச்சியாக பாராளுமன்றத்திலும் அறிக்கைகள் மூலமும் தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு 13 ஆவது திருத்தச் சட்டம்தான் தீர்வை நோக்கிய ஆரம்பப்படி என நாம் வலியுறுத்திவந்தது நிதர்சனமாகி வருவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளரும் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடரபில் அவர் மேலும் கூறுகையில் -

சமீபத்தில் புதுடில்லியில் சில இந்து அமைப்புகள், புலம்பெயர் சிவில் அமைப்பினர், வடக்கு-கிழக்கின் சில அரசியல் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடி தமிழ் மக்கள் அரசியல் உரிமை பெற இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா தலையீடு செய்ய வேண்டும் என கூட்டாக வலியுறுத்தியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

முன்பதாக கிழக்கு மாகாணம் அரச தரப்பினரால் விடுவிக்கப்பட்டதும் தேர்தல் மூலம் மாகாண அதிகாரத்தை மக்களிடம் வழங்குமாறு நாம் கோரியிருந்தோம். குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வடக்கு - கிழக்கை சேர்ந்த 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்று பாராளுமன்றத்தை அலங்கரித்திருந்தாலும் தனி ஒரு நபராக இருந்து அதனை நாம் வலியுறுத்தியிருந்தோம்.

இதேவேளை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டில் இலங்கையின் நிர்வாக அலகு மாவட்ட அலகாகவே இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது. அதன் போதுகூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எவ்விதமான கருத்தையும் தெரிவித்திருக்கவில்லை.




ஆனால் எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே குறித்த கருத்து சுதந்திரக்க கட்சியின் நிலைப்பாடு என்றும் எமது நிலைப்பாடு இலங்கையின் நிர்வாக அலகு மாகாண நிர்வாக அலகாகவே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தார்.

இதேபோன்று வடக்கு மாகாணத்திலும் பேசுபொருளாக இருந்த 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும் என்கின்ற நோக்கில் யார் ஆட்சிக்கு வருகின்றர்கள் என்பது முக்கியமல்ல மாகாண முறைமையை பாதுகாக்கவேண்டும். அது ஜனநாயக ரீதியில் மக்களிடம் ஆட்சி செய்ய வழங்கப்படவேண்டும் என்ற நோக்கில் வடக்கு மாகாண சபை தேர்தலை நடத்துமாறும் வலியுறுத்தியிருந்தோம்.

தேர்தல் நடத்தப்பட்டு வடக்கு மாகாண சபையின் ஆட்சிக்கு விசேடமாக 5 ஆயிரத்து 500 மில்லியன் நிதி மத்திய அரசால் வழங்கப்பட்டது. ஆனால் குறித்த நிதியை ஆட்சி செய்தவர்கள் தமது இயலாமையால் முழுமையாக மக்களுக்கானதாக கொண்டு சேர்க்கவில்லை என்பதும் வரலாறு.

இதனிடையே மாகாணங்களுக்கு அதிகாரங்களை குறைப்பதற்கு ஜேவிபி, சிஹல உறுமய, ஜாதிக ஹெல உறுமய போன்ற தென்னிலங்கை இனவாதக் கட்சிகள் முயன்றபோதும் தென்னிலங்கையை சேர்ந்த சகோதர மொழி பேசும் சில பாராளுமன்ற உறுப்பினர்களுடன் முஸ்லிம் மலையக கட்சிகளை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்புடன் 50 மேற்பட்ட கையொப்பங்களை பெற்று அந்த முயற்சியை தடுத்து நிறுத்தியிருந்தோம்.

நாட்டில் யுத்தம் வலுவாக இருந்த நிலையிலும் நாம் இதனையே வலியுறுத்தியிருந்தோம். ஆனால் இப்போது இவர்கள் காவடி எடுத்துள்ளனர். ஜனாதிபதி அழைத்தும் போகாத இவர்கள் அதனை கிடப்பில் போட்டுவிட்டு பின்னர் ஈஸ்ரர் தாக்குதல், குருந்தூர் மலை விவகாரம், வெடுக்குநாறி ஆலய விவகாரம் என அவ்வப்போது ஏற்படும் பிரச்னைகளை காரணம் காட்டி அடிப்படை பிரச்னையை தீர்க்க முன்வராதிருந்தனர்.

இதனிடையே ஐநா மனித உரிமை பேரவையும் 13 ஆவது வரைபைத்தான் நடைமுறைப் படுத்துமாறு கோருகின்றது. இப்போது இவர்கள் புதுடெல்லிக்கு சென்று இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த கோருவது இதயசுத்தியுடன் உண்மையானதாக இருக்குமாயின் அதனை முதலில் நாமே வரவேற்போம்-என்றார்.

(அ-02)

## சுயநிர்ணய...

தெரிவித்தார்.

மேலும், மனித உரிமைகள் மீறலை சாத்தியமாக்கும் சட்டங்கள் குறித்தும் கரிசனைகள் காணப்படுகின்றன. பயங்கரவாத தடைச்சட்டம் 1979ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது முதல் அரசியல் கைதிகளை நீண்ட காலம் தடுத்துவைப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. மிக மோசமான கறுப்பு ஜூலை கலவரத்தின் பின்னர் நிகழ்ந்த வெலிக் கடை படுகொலைகள் என அழைக் கப்படும் சிறைச்சாலை படுகொலையில் கொல்லப்பட்ட 53 பேரும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களே.

பயங்கரவாத தடைச் சட்டம் அரசாங்கத்தை எதிர்ப்பவர்களை கைது செய்யப் பயன்படுகின்றது. அந்த சட்டம் தற்போது நீக்கப்படலாம் என்கின்ற போதிலும் புதிய உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மோசமானதாக இருக்கலாம் என்ற அச்சம் காணப்படுகின்றது.

மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் அணுகுமுறை இன்னமும் மாற்றமடையவில்லை. இலங்கை அரசாங்கம் தற்போது மீண்டுமொரு உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ஆனால், இது பொறுப்புக்கூறலுக்கான பாதையையோ அல்லது உரிய சாட்சியங்கள் பாதுகாப்பு பொறிமுறையையோ ஏற்படுத்தாது என்ற கரிசனை காணப்படுகின்றது.

மேலும், இது பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளையோ, சர்வதேச தராதரங்களையோ பூர்த்தி செய்யாது. இலங்கையில் நல்லிணக்கம் குறித்து எனக்கு மேலதிக தெளிவுபடுத்தல்களை வழங்கியமைக்காக பிரிட்டனுக்கான இலங்கை தூதரகத்துக்கு நான் நன்றியை தெரிவிக்கின்றேன்.

இலங்கை தூதரகத்தின் ஆவணத்தின் ஒரு பகுதி இவ்வாறு தெரிவிக்கின்றது "நவம்பர் 2023 வரை காணாமல் போனவர்கள் பணிமனையின் தேடும் பிரிவினர் காணாமல்போனதாகத் தெரிவிக்கப்பட்டவர்களில் 16 பேரை உயிருடன் கண்டுபிடித்துள்ளனர். 3 பேர் உயிரிழந்தமையை கண்டுபிடித்துள்ளனர்", என்று தெரிவித்துள்ளது.

18 ஆயிரம் தமிழர்கள் இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்டனர் என்று நம்பபடுகின்றது அப்படியானால் ஏனையவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கிருக்கின்றார்கள் அவர்கள் குறித்து தெரிவிப்பதற்கு என்ன ஆவணங்கள் உள்ளன? ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் என்ற அடிப்படையிலும் இலங்கையின் சகா என்ற அடிப்படையிலும் பொறுப்புக்கூறல், நீதி, மனித உரிமைகள் பாதுகாப்பு போன்றவற்றுக்கான வேண்டுகோள்களுக்கு ஆதரவாக பிரிட்டன் அதிகளவில் செயல்பட வேண்டும் - நடவடிக்கை எடுக்க வேண்டும். சரியான எண்ணிக்கை தெரியவில்லை. ஆனால் ஐக்கிய நாடுகள் குழு 40 ஆயிரம் தமிழர்கள் உட்பட ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் மோதல்களின்போது கொல்லப்பட்டிருக்கலாம் என தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரை இலங்கையில் மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்ட முக்கிய குற்றவாளிகளான சவேந்திர சில்வா மற்றும் இலங்கையின் ஏனைய குற்றவாளிகளுக்கு எதிராக பிரிட்டன் உட்பட உலக நாடுகள் தடைகளை விதிக்கவேண்டும் என தெரிவித்துள்ளது. பெரும் அநீதிகளில் ஈடுபட்டவர்கள் பிரிட்டனுக்குள் வர அனுமதிக்கப்படமாட்டார்கள் என காண்பிப்பதன் மூலம் பிரிட்டன் அமெரிக்கா, கனடா வின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கலாம் - என்றார். (ஐ)

## இலங்கைக்கு...

இந்த நிலையில், மேலும் கருத்துரைத்த அமைச்சர் பந்துல குணவர்த்தன,

"கடன் மறுசீரமைப்பின்போது அனைத்து வைப்பாளர்களின் வைப்பு தொகையில் ஒரு பகுதியை அரசாங்கம் மீட்டெடுக்கும் எனும் சித்தாந்தத்தை எதிர்க்கட்சிகள் கொண்டு வந்தன. அனைத்து மக்களின் வைப்புத் தொகைகளையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் உழைத்தது. எதிர்காலத்தில் அதை மேலும் பாதுகாப்பானதாக மாற்றுவதற்கு, வைப்பு தொகைகள் அனைத்தையும் காப்பீடு செய்து ஒரு பெரிய தொகையை மூலதனமாக்குவதற்கு உலக வங்கியிடமிருந்து 15 கோடி அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதற்கு ஒப்புக்கொண்டுள்ளது" - என்றார். (ஐ)

## ஐ.எம்.எவ்வின்...

நம்பிக்கையை வெளியிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் எதிர்வரும் 12ஆம் திகதி பேச்சுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அன்று பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டால் அன்றைய தினமே இரண்டாம் கட்ட கடன் தொகையையும் பெற்றுக் கொள்ள முடியும். நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க எம்மிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் இரண்டாம் கட்ட கடன் தொகையும் கிடைக்காது, கடன் மறுசீரமைப்பையும் மேற்கொள்ள முடியாது என்று பரவலாகப் பேசப்பட்டது. எனினும், இது பொய்யாக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் இரு வாரங்களுக்குள் நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் கிடைக்கும் என்று நம்புகின்றோம். சீனா, இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகள் உத்தியோக பூர்வமாக கடன் மறுசீரமைப்புக்கு இணக்கம் தெரிவித்துள்ளன - என்றார். (ஐ)

## நல்லிணக்கம்...

கிழக்கில் புராதன பௌத்த நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. எந்த சந்தர்ப்பத்திலும் பௌத்த விகாரைகள் சேதமாக்கப்படவில்லை.

எனினும், யுத்தம் நிறைவடைந்த பின்னர் தொல்பொருள் இடங்களை திரிபுபடுத்தி பௌத்த அடையாளங்களாக சித்தரிப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவை பௌத்த அடையாளங்களாக இருந்திருந்தால் அது பௌத்த இடங்களாக பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமே தவிர அவற்றை திரிபுபடுத்தி கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

குருந்தூர்மலையில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரை அகற்றப்பட வேண்டும். தையிட்டியில் தனியார் காணி அபகரிக்கப்பட்டு கட்டப்பட்டுள்ள விகாரை அகற்றப்பட வேண்டும். மாங்குளத்தில் கட்டப்பட்டுள்ள விகாரை அகற்றப்பட வேண்டும்.

குருந்தூர் மலையில் ஆதி சிவனார் ஆலயத்தில் தமிழ் மக்கள் பொங்கல் வைக்கக்கூட முடியாமல் உள்ளது. தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அங்கு தகரம் ஒன்றை வைத்துதான் பொங்கல் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்கள்.

அப்படியானால் தமிழர்களுக்கு ஒரு சட்டம் சிங்களவர்களுக்கு ஒரு சட்டமா? நாட்டில் யுத்தம் நிறைவு பெற்று 15 வருடங்களாகியும் நல்லிணக்கம் ஏற்படாமல் இருப்பதற்கு காரணம் புத்தசாசன அமைச்சும் தொல்பொருள் திணைக்களமும் மேற்கொள்கின்ற இது போன்ற நடவடிக்கைகள்தான். திணைக்களம் இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். தமிழர்கள் பௌத்தத்துக்கு எதிரானவர்கள் அல்லை. சிங்கள மக்களின் உண்மையான நண்பர்களாகவே வாழ விரும்புகின்றனர் - என்றார். (ஐ)

## சிப்பாய்க்கு...

மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன.

இதையடுத்து நீதிபதி எம். எம். மிகால், குற்றவாளிக்கு மரண தண்டனை தீர்ப்பளித்தார். அத்துடன், தண்டனை பெற்ற கைதியை கண்டி-போகம்பரை சிறைச்சாலைக்கு அனுப்பும்படி கட்டளையிடப்பட்டார். (ஐ)

## வாள்...

நாம் எமது வாழ்க்கை முறைக்கேற்ப அனுமதிக்க வேண்டும். பாதுகாப்பான முறையில் அதனை பயன்படுத்தவேண்டும்.

தற்போதைய சூழலில் உள்ளூர் தொலைக்காட்சி அலைவரிசையை எத்தனை பேர் பார்க்கிறார்கள். இந்திய தொலைக்காட்சியை எத்தனை பேர் பார்க்கிறார்கள். சிறுவர்களிலும் பார்க்க சிறுமிகளை அவதானித்தால், அவர்களின் பேச்சுகளில் நிறையவே மாற்றங்களை காணலாம். அந்தளவுக்கு சினிமா பார்க்கிறார்கள்.

நாங்கள் வழிதவறாமல் செல்வதற்கு நம்பிக்கையூட்டும் வகையில் எமது வாழ்க்கை முறை இருக்க வேண்டும். எமது வாழ்க்கை முறையை சரியாக கொண்டு சென்றாலே எதிர்கால சந்ததிகள் முறையான, சரியான வாழ்க்கை முறையை பின்பற்றுவார்கள்.

இன்றைய காலத்தில் வாள்வெட்டு கலாசாரம், போதைவஸ்து பயன்பாடு அதிகரித்து ஆக்கிரமித்துள்ளது. இவற்றை கட்டுப்படுத்த ஒன்றிணைய வேண்டும். "வாள்வெட்டு கலாசாரத்தை தடுக்க வாள் தயாரிப்பவர்களை கைது செய்யுங்கள்" என அண்மையில் இடம் பெற்ற பொலிஸாருடனான சந்திப்பில் அறிவுறுத்தினேன் - என்றார். (ஐ)

## புதிய கல்வி....

என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

எதிர்காலத்தில் க.பொ.த சாதாரண தர பரீட்சை தரம் 10இலும் க.பொ.த உயர்தர பரீட்சை தரம் 12இலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "2024 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் கல்வி அமைச்சுக்காக 23 ஆயிரத்து 700 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாகாண ரீதியில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள 28 ஆயிரம் கோடி ரூபாயுடன் நிதியுடன் மொத்தமாக 51 ஆயிரத்து 700 கோடி ரூபாய் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவர்களையும் சாதாரண பிள்ளைகள் கல்வி கற்கும் வகுப்பறைகளில் இணைத்துக்கொள்ளக் கூடிய வகையிலான கல்வி (inclusive education) முறையை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

பல்வேறு அபிவிருத்தி அடைந்த நாடுகளின் தேசிய வருமானத்தின் பெரும்பகுதியை பிரதிநிதித்துவப் படுத்தும் STEAM கல்வியின் மூலம் கட்டமைக்கப்பட்ட மனித வளமாகும். அதேபோன்று, இந்நாட்டின் பாடசாலைக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த, விஞ்ஞானம், தொழில்நுட்பம் பொறியியல், கலை, கணிதம் ஆகிய துறைகள் மூலம் பிள்ளைகளுக்கு முறையான வழிகாட்டல் வழங்கப்பட வேண்டியுள்ளதோடு, அவற்றை முன்னுரிமைப்படுத்தும் செயல்பாடுகளுக்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புடன் முழுமையான கல்விக் கட்டமைப்பையும் டிஜிற்றல் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். 1-5 / 6-9 / 10-13 ஆம் தரங்களுக்கு புதிய கல்வி மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்தும் முன்னோடி வேலைத்திட்டம் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் - என்றார். (ஐ)

# தெஹிவளையில் கைக்குண்டு மீட்பு

கொழும்பு, டிசெ. 07

கொழும்பு - தெஹிவளையில் கட்டடமொன்றில் நேற்று புதன்கிழமை காலை கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, பொலித்தீன் பையில் சுற்றப்பட்ட நிலையில், கட்டிடத்தின் ஐந்தாவது மாடியில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் தெஹிவளை பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார்.

பின்னர் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினரால் கைக்குண்டு மீட்கப்பட்டது. (ஐ)

## குழந்தைகளின்...

வகைகளுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது. உரங்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது. டீசலுக்கும் வரி விதிக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக மருத்துவ பொருட்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது. அரச மருத்துவமனைகளுக்கு பொருட்கள் கொண்டு வரப்படும் போது அதற்கான முழு செலவையும் அரசாங்கம் ஏற்கும்.

தற்போது தனியார் மருத்துவனைகளுக்கு பணக்காரர், ஏழைகள் என அனைவரும் செல்கின்றார்கள். ஏனெனில், மருத்துவ உபகரணங்கள் இல்லாமையால் அரச மருத்துவமனைகளில் அதிகமான மருத்துவ பரிசோதனைகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆகவே, தனியார் மருத்துவமனைகளிலேயே பரிசோதனைகளை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் குழந்தைகளுக்கான போசாக்கு உணவுகள் மற்றும் மருத்துவப் பொருட்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளமை அரசின் மிகவும் அசாதாரண செயலாகும் - என்றார். (ஐ)

## புதிய...

சந்ததியினர் வரை கொண்டு செல்ல முடியாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

புதிய பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுத்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்காக அனைவரும் இணைந்து கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார்.

18 மாதங்களில் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து தாம் மீட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க தெரிவித்தார்.

நிலையான பொருளாதாரத்தை டிஜிற்றல் பொருளாதாரத்திற்கு கொண்டு செல்ல புதிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் எனவும் அதில் நவீன பொருளாதார முறைகளை பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

## எட்கா...

கடந்த ஒக்ரோபர் 30 முதல் நவம்பர் முதலாம் திகதி வரை கொழும்பில் நடைபெற்றது. இதில் ஏற்புடைய பல துறைகள் தொடர்பாக இரு தரப்பு செயல்பாட்டுக் குழு உடன்பாடுகளை எட்டியுள்ளது.

ஒப்பந்தத்தின் 13 ஆவது சுற்றுக் கலந்துரையாடலை வரும் ஜனவரி 8ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை இந்தியாவில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2024 மார்ச்சில் போது தொழில்நுட்ப மட்டத்திலான கலந்துரையாடல்களை நிறைவு செய்வதற்கும் இரு தரப்பினரும் உடன்பட்டுள்ளனர். 12ஆவது சுற்றுக் கலந்துரையாடல் தொடர்பாக ஜனாதிபதி சமர்ப்பித்த தகவல்கள் அமைச்சரவையின் கவனத்தில் கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஈழநாடு
Eelanadu

# மாவீரர் தின நினைவேந்தலை அனுஷ்டித்தோரை கைது செய்க!

## உத்தரவிட்டார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, டிசெ. 07

**மாவீரர் தினத்தில் புலிகளை நினைவுபடுத்தி மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் பணித்துள்ளார்.**

புலிகளை நினைவு கூரும் வகையில் ஆடைகளை அணிந்தமை ,புலிச் சின்னம், கொடிகளை ஏந்தியமை உட்பட்ட பல்வேறு விடயங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் அது புலிகளின் மீளுருவாக்கத்திற்கு வழிவகுக்கும் என்ற அச்சம் தென்னிலங்கையில் இருப்பதால் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஜனாதிபதி நீதியமைச்சர் விஜயதாஸவையும், பொதுமக்கள் பாதுகாப்பமைச்சர் டிரான் அலஸையும் கேட்டுள்ளார்.

இதனையடுத்து மாவீரர் தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்தவர்கள் உடனடியாக விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர்.அத்துடன் புலிகளின் சின்னங்களுடன் நினைவு கூர்ந்தவர்கள் விசாரணைக்காக அழைக்கப்படவுள்ளதாக அறியமுடிகின்றது. (அ)

# நாலக சில்வா விடுதலை

கொழும்பு, டிசெ. 07

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவுக்கு எதிரான வழக்கிலிருந்து அவரை விடுவிக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரை படுகொலை செய்ய சதித்திட்டம் தீட்டினார் என 2019 இல் அவருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டது.

இந்நிலையில் நாலக சில்வாவுக்கு எதிராக போதிய சாட்சியங்கள் இல்லை என சட்டமா அதிபர் நீதிமன்றில் நேற்று அறிவித்தார்.

இதனை அடுத்து அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)



# இந்திய இராணுவ ஆலோசகரை சந்தித்தார் இராணுவத் தளபதி!

கொழும்பு, டிசெ. 07

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் செயலாளரும் இராணுவ ஆலோசகருமான எயார் மார்சல் சந்தீப் சிங்கை சந்தித்துள்ளார்.

இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு, முப்படைகளுக்கு இடையிலான பயிற்சி தொகுதிகளை மேம்படுத்துதல், புதிய தொழில்நுட்பம், ஆயுதப் படைகளின் நவீன மயமாக்கல் மற்றும் கூட்டுப் பயிற்சிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன் போது இருவரும் கலந்துரையாடினர்.

இந்திய இராணுவத் தளபதியின் அழைப்பை ஏற்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே இந்தியாவிற்கு விஜயம் செய்தார். (அ)

# தமிழ் மக்களை ஒருபோதும் பிரித்துப் பார்க்கமாட்டோம்!

## கூறுகிறார் அமைச்சர் விதுர



கொழும்பு, டிசெ. 07

மதங்களைப் பிளவுபடுத்தும் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபடாது என புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எந்தவொரு காரணம் கொண்டும் அரசாங்கம் என்ற வகையிலோ அமைச்சினாலோ மத ரீதியாக அல்லது மொழி ரீதியாக மக்களை, பிரிக்க நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

அரசமைப்புக்கு இணங்க, பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதற்கு முன்னுரிமை வழங்கப்படும் அதேநேரம், ஏனைய மதங்களை ஒதுக்க வேண்டும் என்றோ அல்லது இரண்டாம் நிலைக்குத் தள்ள வேண்டும் என்றோ எங்கும் கூறப்படவில்லை.

தொல்பொருள் திணைக்களத்திற்குக்கூட, நாம் வடக்கு-கிழக்கில் பழுதடைந்துள்ள கோயில்களை புனர்நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்குமாறு நாம் பணித்துள்ளோம்.

இந்தாண்டுக்குள் நாம் இரண்டு கோயில்களை அடையாளம் கண்டுள்ளோம். இங்குள்ள இலட்சனைகள் வேறு எங்கும் இல்லாத காரணத்தினால், அவற்றை புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தமிழ் மக்களை ஒருபோதும் பிரித்துப் பார்க்க மாட்டோம்-என்றார். (அ)

# ஊழலை எதிர்த்தமையால்தான் அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டது

## ரொஷான் ரணசிங்க கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 07

தீர்மானங்கள் மேற்கொள்ளும் போது தாம் விரைவாக செயற்பட்டதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

தம்மீதான உயிர் அச்சுறுத்தல் தொடர்பில் பத்தர முல்லையில் உள்ள பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட் சிகளை பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபையில் அவர் முறைப்பாடளித்துள்ளார்.

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் குறித்த விடயத்தை குறிப்பிட்டார்.

ஊழலுக்கு எதிராக செயற்பட்டமைக்காக தாம் அமைச்சு பதவியையும் இழந்துள்ளதாக அவர் கூறினார்.

நாட்டில் கிரிக்கெட் தொடர்பில் பாரிய சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில் தற்போதைய விளையாட்டுத் துறை அமைச்சர் நீதிமன்றத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி வரை காலஅவகாசம் கோரியுள்ளமைக்கான காரணம் தெளிவாகவில்லை எனவும் முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

# கறுவாப் பட்டை விலையில் வீழ்ச்சி

கொழும்பு, டிசெ. 07

இலங்கை சந்தையில் கறுவா விலை குறைந்துள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

அல்பா கறுவாப் பட்டை இலங்கை கறுவா சந்தையில் கிடைக்கும் மிக உயர்ந்த தரமாகும்.

ஒரு கிலோகிராம் அல்பா கறுவா 4,800 ரூபா முதல் 5,000 ரூபா வரையில் விற்பனைசெய்யப்பட்ட நிலையில் தற்போது சந்தையில் 500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கட்டுவன மற்றும் வலஸ்முல்ல பிரதேச மக்களின் பிரதான வாழ்வாதாரம் கறுவா செய்கையாகும்.

விற்பனையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக தற்போது கறுவாவின் விலை குறைந்துள்ளது. இந்நிலையில் கறுவா செய்கையை பிரதான வாழ்வாதாரமாக கொண்ட மக்கள் பெரும் அசௌகரியத்துக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுயாதீன கணக்காய்வை மேற்கொள்ளுமாறு மின்சார சபைக்கு ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 07

இலங்கை மின்சார சபையின் இலாபம் மற்றும் மின்சார உற்பத்தி தொடர்பில் சுயாதீன கணக்காய்வொன்றை மேற்கொள்ளுமாறு இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மின்சார சபையின் செலவுகள் தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட முரண்பாடான தரவுகளைக் கருத்திற்கொண்டு இந்த பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்மாத இறுதிக்குள் எந்த தரப்பினரால் குறித்த கணக்காய்வு மேற்கொள்ளப்படவுள்ளது என்பது தொடர்பான அனைத்து தகவல்களையும் வழங்குமாறு மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தற்போதைய நிலைமைக்கு மத்தியில் மின்சார கட்டணத்தை குறைப்பது தொடர்பான முன்மொழிவுகளை இந்த மாதத்திற்குள் முன்வைக்குமாறு மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்மொழிவுகள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் எதிர்வரும் ஜனவரி மாதம் மின்சார கட்டணத்தை திருத்துவதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்படும் என இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# பொதுமக்களிடம் முறைகேடாக பணம் வசூலித்த மூவர் கைது!


கொழும்பு, டிசெ. 07

அரச சார்பற்ற நிறுவனமொன்றை சேர்ந்தவர்கள் எனக் கூறி பொதுமக்களிடம் முறைகேடாக பணம் வசூலித்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எதிமலே - கெமுனுபுர பகுதியில் ஒருவரும், சியம்பலாண்டுவ - மத்துகம பகுதியில் இருவரும் கைதாகியுள்ளனர்.

சந்தேகநபர்கள் சியம்பலாண்டுவ மற்றும் மொனராகலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 28 முதல் 46 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# தலைமை பதவியிலிருந்து கோலியை நான் நீக்கவில்லை!

## கங்குலி தெரிவிப்பு

கொல்கத்தா, டிசெ. 07

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர கிரிக்கெட் வீரர் விராட் கோலி கடந்த 2021ஆம் ஆண்டு ரி - 20 உலகக் கிண்ணத்தில் இந்திய அணி தோல்வியடைந்த பின் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். அதனை தொடர்ந்து ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியில் இருந்து விராட் கோலி நீக்கப்பட்டு தலைமை பொறுப்பு ரோஹித் சர்மாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த சர்ச்சையை தொடர்ந்து 2022ஆம் ஆண்டு இந்திய அணியின் டெஸ்ட் தலைவர் பதவியில் இருந்தும் விராட் கோலி விலகினார். தலைமை பதவியில் இருந்து கோலி நீக்கப்பட்ட விவகாரத்தில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. மேலும், அப்போது, இந்திய கிரிக்கெட் சபைக்கு தலைவராக இருந்த சௌரவ் கங்குலி மீதும் விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில், தலைமை பதவியில் இருந்து கோலி நீக்கப்பட்டது குறித்து சௌரவ் கங்குலி கருத்து தெரிவித்துள்ளார்.

“நான் விராட் கோலியை தலைமை பதவியில் இருந்து நீக்கவில்லை. இது குறித்து நான் பல முறை கூறியுள்ளேன். இந்திய அணியின் ரி -20 தலைவராக செயல்பட விராட் கோலி விரும்பவில்லை. கோலி அந்த முடிவு எடுத்த பின்னர் நீங்கள் ரி 20 தலைவராக செயல்பட விரும்பவில்லையெனில் ஒட்டுமொத்தமாக வெள்ளைப்பந்து கிரிக்கெட்டின் தலைமை பதவியில் இருந்து (ஒருநாள் மற்றும் ரி-20) விலகுவது நல்லது என்று நான் கூறினேன். வெள்ளைப்பந்து கிரிக்கெட்டுக்கு (ஒருநாள் மற்றும் ரி-20) தனி தலைவர், சிவப்பு பந்து கிரிக்கெட்டுக்கு (டெஸ்ட்) தனி தலைவர் இருக்கட்டும் என்றேன்.

3 வகை கிரிக்கெட்டிலும் தலைமை பதவி வகிக்க விராட் கோலி விரும்பாததால் ரோஹித் சர்மாவை தலைமைப் பொறுப்பேற்கும்படி நான் கூறினேன். இந்திய கிரிக்கெட் சிறப்பாக செயல்படவே நான் பிசிசிஐ தலைவராக நியமிக்கப்பட்டேன். அந்த பணியில் இது ஒரு சிறிய பகுதி“ என்றார்.

# நடக்கமுடியாது போகும்வரை ஐ. பி. எல்லில் விளையாடுவேன்!

## மக்ஸ்வெல்




சிட்னி, டிசெ. 07

2023 உலகக் கிண்ண சம்பியன் அணியான அவுஸ்திரேலிய அணியின் முக்கிய வீரரும், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் (ஆர். சி. பி.) அணியின் முக்கிய வீரருமான கிளென் மக்ஸ்வெல் தன்னால் நடக்கவே முடியாது போகும் வரை ஐ. பி. எல். கிரிக்கெட்டில் ஆடுவேன் என்று சூளுரைத்துள்ளார்.

ஐ. பி. எல். தொடர்களில் அவுஸ்திரேலிய வீரர்கள் தொடர்ச்சியாக ஆடி வருகின்றனர்.

2021 இருபது - 20 உலகக் கிண்ணத்தை அவுஸ்திரேலியா வென்றது. 2022ஆம் ஆண்டு ரி -20 உலகக் கிண்ணத்தை இங்கிலாந்து வென்றது. இந்த ஆண்டு நடந்த ஒருநாள் உலகக் கிண்ணத்தில் கிளென் மக்ஸ்வெல் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக 91/7 என்ற நிலையிலிருந்து அதிரடி இரட்டைச் சதம் விளாசி சாதனை படைத்தார். சமீபத்தில் இந்தியாவுக்கு எதிராக நடந்த ரி -20 தொடரில் அதிரடி சதத்தை எடுத்து அவுஸ்திரேலியாவின் ஒரே வெற்றிக்குக் காரணமாகத் திகழ்ந்தார்.

இந்நிலையில், பெங்களூர் அணிக்கு மீண்டும் 2024 ஐ. பி. எல். தொடரில் ஆடவிருக்கும் கிளென் மக்ஸ்வெல் கூறியவை வருமாறு,

“நான் விளையாடும் கடைசி தொடர் எதுவாக இருக்குமென்றால் அது நிச்சயம் ஐ. பி. எல். தொடராகவே இருக்கும். என்னால் நடக்க முடியாது போகும் வரை நான் ஐ. பி. எல். தொடர்களில் ஆடவே செய்வேன்.

என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் ஐ. பி. எல். பங்களிப்பு செய்தது போல் வேறு எதுவும் பங்களிப்பு செய்யவில்லை. சந்தித்த மனிதர்கள், பயிற்றுநர்கள் அனைத்துமே மிகமிகப் பயனுள்ளவர்கள். மேலும் பல சர்வதேச வீரர்களுடன் அளவளாவியது, கிரிக்கெட் சிந்தனைகளை பகிர்ந்து கொண்டது என்று ஐ. பி. எல். ஒரு முழு வாழ்வியலையே எனக்குக் காட்டியுள்ளது.

ஐ. பி. எல். வாழ்க்கை பாடமாக அமைந்தது. விராட் கோலி, ஏ. பி. டிவில்லியர்ஸ் போன்றோருடன் அளவளாவுவது, அவர்களுடன் ஆடுவது, அவர்களுடன் பேசுவது என்று அனுபவம் நம்மை வளம்பெறச் செய்கிறது. அவுஸ்திரேலிய வீரர்கள் நிச்சயம் ஐ. பி. எல். தொடரில் ஆடி அடுத்த உலகக் கிண்ண ரி -20 நடைபெறும் மே.இ.தீவுகள் போன்ற அதே ஆடுகளம் உள்ளிட்ட சூழ்நிலைகளுக்கு இந்திய ஐ. பி. எல். தொடரில் தங்களைத் தயார்படுத்திக் கொள்வார்கள். மே.இ.தீவுகளில் வறண்ட ஆடுகளத்தில் பந்துகள் சுழலும் என்று எதிர்பார்க்கலாம்.

ஏற்கெனவே இந்த உலகக் கிண்ணம் முடிந்தவுடனேயே அடுத்த உலகக் கிண்ணம் குறித்து கவனம் செலுத்தத் தொடங்கி விட்டோம். பிக்பாஷ் ரி -20 தொடரும் ஓர் உற்சாகமான சம்மராக இருக்கும் என்று கருதுகிறேன். சரியான காரணங்களுக்காக தலைப்புச் செய்திகளில் இடம்பெற்று ஆஸ்திரேலிய அணியில் நம் இடத்துக்கான வாய்ப்புகளை பிரகாசப்படுத்திக் கொள்ள வேண்டும்” என்று கிளென் மேக்ஸ்வெல் கூறினார்.

# எனது சாதனையை கில் முறியடிப்பார்!

## பிரைன் லாரா



டிரினிடாட், டிசெ. 07

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் பிரைன் லாரா. இவர் மேற்கிந்திய தீவுகள் அணிக்காக 299 ஒருநாள் போட்டிகள் மற்றும் 131 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ளார்.

குறிப்பாக டெஸ்ட் கிரிக்கெட்டில் அற்புதமான செயல்பாட்டை வெளிப்படுத்தியுள்ள லாரா 131 போட்டிகளில் 11,953 ஓட்டங்களை குவித்துள்ளார். மேலும் அதில் 34 சதங்களை விளாசியுள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டில் ஓர் இன்னிங்சில் தனிநபர் அதிகபட்ச ஓட்டங்கள் (400 ஓட்டங்கள்) அடித்த வீரராக இன்றளவும் முன்னிலையில் உள்ளார்.

இந்நிலையில் எதிர்காலத்தில் தன்னுடைய இந்த 400 ஓட்டங்கள் சாதனையை இந்திய இளம் வீரரான ஷூப்மன் கில் முறியடிப்பார் என பிரைன் லாரா கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

ஷூப்மன் கில்லால் என்னுடைய இரண்டு சாதனைகளை முறியடிக்க முடியும். தற்போதுள்ள வீரர்களில் அவர் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துகிறார். உலகக் கிண்ணத்தில் அவர் ஒரு சதம்கூட அடிக்கவில்லை என்றாலும் இதுவரை அவர் விளையாடி இருக்கும் விதத்தை பார்க்கும்போது அற்புதமான செயல்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் மூன்று வகையான கிரிக்கெட்டிலும் சதம் அடித்துள்ள அவர் ஒருநாள் போட்டிகளில் இரட்டை சதமும் அடித்துள்ளார். இப்படி மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ள அவர் இனிவரும் ஐ.சி.சி தொடர்களிலும் அற்புதமான செயல்பாட்டை வெளிப்படுத்துவார்.

அத்துடன், டெஸ்ட் கிரிக்கெட்டில் என்னுடைய 400 ஓட்டங்கள் சாதனையை அவரால் நிச்சயம் கடக்க முடியும். அதுமட்டுமின்றி ஒருவேளை அவர் கவுண்டிக்கு சென்று விளையாடினால் அங்கு என்னுடைய 501 ஓட்டங்கள் சாதனையையும் அவரால் முறியடிக்க முடியும் - என்றார்.

# நியூசிலாந்தை வீழ்த்தியது பாகிஸ்தான் மகளிர் அணி!

டுனெடின், டிசெ. 07




பாகிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ரி -20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று ஆடி வருகிறது. முதலாவது ரி - 20 போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று தொடரில் 1-0 என முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ரி -20 போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட்டை இழந்து 137 ஓட்டங்கள் எடுத்தது. பாகிஸ்தான் தரப்பில் முனீபா அலி 35 ஓட்டங்கள், அலியா ரியாஸ் 32 ஓட்டங்கள் எடுத்தனர்.

இதையடுத்து 138 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய நியூசிலாந்து அணி பாகிஸ்தானின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இறுதியில் நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டை இழந்து 127 ஓட்டங்களே எடுத்தது. இதன் மூலம் பாகிஸ்தான் அணி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 2-0 என பாகிஸ்தான் கைப்பற்றியது. இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ரி -20 போட்டி வரும் 9ஆம் திதி நடைபெற உள்ளது.

# தெற்கு காஸாவிற்குள் நுழையும் இஸ்ரேல் படைகள்:

## தீவிரமடையும் மனிதாபிமானச் சிக்கல்!

இஸ்ரேல்-காஸா இடையிலான போரில் ஒருவார கால இடைக் கால போர்நிறுத்தம் கடந்த வெள்ளிக்கிழமை முடிந்தது. கடந்த மூன்று நாட்களாக தீவிரமான குண்டுவீச்சு நடந்ததைத் தொடர்ந்து, தற்போது இஸ்ரேலிய தரைப் படைகள் காஸாவின் அனைத்து பகுதிகளிலும் முன்னேறி வருவதாகத் தெரிவித்திருக்கின்றன.

இஸ்ரேல் காஸா மீது ஒரு பெரிய அளவிலான குண்டுவீச்சு பிரச்சாரத்தை மறுதொடக்கம் செய்துள்ளது, இதை கான் யூனிஸ் வாசிகள் இதுவரை நடந்த தாக்குதல்களில் மிகப்பெரிய அலை என்று கூறியுள்ளனர்.

இஸ்ரேலியப் படைகள் தெற்கு காஸாவை நோக்கி முன்னேறியிருக்கின்றன. தெற்கு காஸாவில் இஸ்ரேலிய பாதுகாப் புப் படைகள் 'வலுவாகவும் முழுமையாகவும்' போரிட்டு வருவதாக இஸ்ரேல் பாதுகாப் புப் படைகளின் தளபதி கூறியுள்ளார்.

இஸ்ரேலிய ராணுவ வானொலியின் முதற்கட்டத் தகவல்களின்படி, கான் யூனிஸின் வடக்கே இஸ்ரேல் தரைவழி நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இஸ்ரேலிய டாங்கி ஒன்று நகரை நெருங்கும் காட்சிகளையும் பிபிசி உறுதி செய்துள்ளது.

காஸாவில் ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகத்தின் கூற்றுப்படி, குண்டுவெடிப்பு மீண்டும் தொடங்கியதில் இருந்து 500-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.


அரசாங்கத்தின் கூற்றுப்படி, போர் தொடங்கியதில் இருந்து 15,500-க்கும் மேற்பட்ட மக்கள் இந்த பகுதியில் கொல்லப்பட்டுள்ளனர்.

**'இஸ்ரேல் படைகளின் முழுமையான தாக்குதல்'**

லெப்டினன்ட் ஜெனரல் ஹெர்சி ஹலேவி, காஸா பிரிவின் பாதுகாப்புப் படையினரிடம் இராணுவ நோக்கங்கள் மற்றும் ஹமாஸ் தளபதிகளை இஸ்ரேலிய ராணுவம் கொன்றது பற்றிப் பேசினார்.

மேலும் அவர் ராணுவத்தினரிடம், "நாங்கள் வடக்கு காஸா பகுதியில் வலுவாகவும் முழுமையாகவும் போராடினோம், இப்போது தெற்கு காசா பகுதியிலும் நாங்கள் அதைச் செய்கிறோம்," என்றார்.










இஸ்ரேலிய ராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவர், காசா முழுவதும் இஸ்ரேல் படைகள் 'தரையில் ஊடுருவதை தொடர்கின்றன' என்றும் துருப்புக்கள் 'பயங்கரவாதிகளை நேருக்கு நேர் எதிர்த்துப் போராடுகின்றன,' என்றும் கூறினார்.

இஸ்ரேலிய சிறைகளில் இருந்து 240 பாலஸ்தீனியர்களை விடுவிப்பதற்கு ஈடாக காசாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 110 கைதிகளை ஹமாஸ் விடுதலை செய்தது.

ஞாயிற்றுக்கிழமை காலை கான் யூனிஸின் பல்வேறு மாவட்டங்களுக்கு இஸ்ரேலிய ராணுவம் வெளியேற்ற உத்தரவுகளை வழங்கியது, குடியிருப்பாளர்களை உடனடியாக வெளியேறுமாறு கேட்டுக்கொண்டது.

ஹமாஸ் தளபதிகள் நகரத்தில் மறைந்திருப்பதாக இஸ்ரேலிய போலிசார் நம்புகிறார்கள். அங்கிருந்த லட்சக்கணக்கான மக்கள் போரின் ஆரம்பக்கட்டங்களில் அங்கிருந்து தப்பி தெற்கில் தஞ்சமடைந்தனர்.

**'பேரழிவிற்கும் அப்பாற்பட்ட சூழ்நிலை'**

காசாவில் தங்கியிருக்கும் பிரிட்டிஷ்-பாலஸ்தீனியரான முகமது கலாயினி, நிலைமையை 'பேரழிவுக்கும் அப்பாற்பட்டது' என்று விவரித்தார்.

"மக்கள் 50 நாட்கள் அல்லது அதற்கும் மேலாக மிருகத்தனமான இஸ்ரேலிய தாக்குதலைத் தாங்கிக்கொண்டிருக்கிறார்கள், உணவு, தண்ணீர், மின்சாரம், மற்றும் சுகாதாரச் சேவைகள் என அனைத்தும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன," என்று அவர், தொலைபேசியில் இணைப்பு துண்டிக்கப்படுவதற்கு முன்பு கூறினார்.

மான்செஸ்டரைச் சேர்ந்த காற்று மாசுபாடு நிபுணரான இவர், அக்டோபர் 7-ஆம் தேதி நடந்த தாக்குதலுக்குச் சற்று முன்பு தனது தாயைப் பார்க்க மூன்று மாத பயணமாக காஸாவிற்கு வந்தார்.

**"போர் மண்டலமாகும்" மருத்துவமனைகள்**

இஸ்ரேலிய ராணுவம் அதன் தாக்குதலின் மையத்தை தெற்கே நகர்த்திய பிறகு, காஸா மருத்துவமனையில் இதற்கு முன்பு பார்த்திராத பீதி பரவியிருப்பதாக ஒரு ஐ.நா அதிகாரி குறிப்பிட்டார்.

யுனிசெஃப் அதிகாரி ஜேம்ஸ் எல்டர், கான் யூனிஸில் உள்ள நாசர் மருத்துவ மருத்துவமனையை 'போர் மண்டலம்' என்று விவரித்தார்.

திரு எல்டர், நாசர் மருத்துவமனைக்கு அருகே தொடர்ந்து பெரிய வெடி சத்தம் கேட்கிறது என்றும், குழந்தைகள் தலையில் காயங்கள், பலத்த தீக்காயங்கள் மற்றும் சமீபத்திய குண்டுவெடிப்புகளில் இருந்து துண்டாகி வருகிறார்கள் என்றும் கூறினார்.

மேலும், 'நான் வழக்கமாகச் சென்ற மருத்துவமனையில், குழந்தைகளும் குடும்பங்களும் என்னை இப்போது அடையாளம் கண்டுகொள்கின்றன. அதே நபர்கள் என் கையையோ அல்லது சட்டையையோ பிடித்துக்கொண்டு, 'தயவுசெய்து எங்களை எங்காவது பாதுகாப்பாக அழைத்துச் செல்லுங்கள்' என்று என்னிடம் கெஞ்சுகிறார்கள். பாதுகாப்பான இடம் எங்கே இருக்கிறது?" என்றார்.



**'எச்சரிக்கைகள் வழங்கப்படுகின்றன'**

போர் மீண்டும் தொடங்கியதில் இருந்து, இஸ்ரேல் மீது ராக்கெட்டுகள் தொடர்ந்து ஏவப்பட்டு வருகின்றன.

காஸாவின் வடக்குப் பகுதியை விட்டு வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவிட்டதையடுத்து, கான் யூனிஸில் தஞ்சம் புகுவதற்காக லட்சக்கணக்கான மக்கள் ஏற்கனவே வெளியேறியுள்ளனர்.

சமீபத்திய ஐ.நா. அறிக்கையின்படி, 18 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் காஸாவில் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனர்.

ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணையர் பிலிப்போ கிராண்டி, காசாவில் உள்ள பாலஸ்தீனியர்கள், "ஏற்கனவே மிகவும் குறுகியதாக இருக்கும் ஒரு பிரதேசத்தில், குறுகிய ஒரு மூலையை நோக்கி மேலும் மேலும் தள்ளப்படுகிறார்கள்," என்று கூறினார்.

இஸ்ரேலிய ராணுவம் குண்டுவீசப்படும் பகுதிகளின் வரைபடங்களை ஆன்லைனில் வெளியிடத் தொடங்கியுள்ளது. இந்த வரைபடங்கள், தொலைபேசி அழைப்புகள் மற்றும் காசாவில் விமானம் மூலம் வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் பொதுமக்களை வெளியேறும்படி எச்சரிக்கும் என்று அது கூறுகிறது.

**காஸாமீது இதுவரை 10,000 வான்வழித் தாக்குதல்கள்**

பொதுமக்கள் தங்கள் இலக்குகள் அல்ல என்றால். மேலும், ஹமாஸ் 'தனது பயங்கரவாத இயந்திரத்தை பொதுமக்களிடையே ஊடுருவ விடுவதால்' அவர்களைப் பாதுகாப்பது மிகவும் கடினமாகி விட்டது என்று இஸ்ரேல் அதிகாரி ஒருவர் கூறினார்.

இஸ்ரேலிய ராணுவம் 'மிகவும் கடினமான போர் சூழ்நிலையில் முடிந்தவரை தாக்குதல்கள் பற்றிய முன்னறிவிப்பை வழங்கியதாகவும்' அவர் கூறுகிறார்.

காஸாவில் ஹமாஸால் பயன்படுத்தப்பட்ட 800 சுரங்கப்பாதை தடங்களில் 500-ஐ தகர்த்துள்ளதாக இஸ்ரேலிய ராணுவம் கூறுகிறது.

மேலும், போர் துவங்கியதில் இருந்து 'பயங்கரவாத இலக்குகள்' மீது தோராயமாக 10,000 வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாக அது கூறியது.

ஈழநாடு



# பாரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகள்: இஸ்ரேலுக்கு தடை விதிக்கப்படுமா?




ஐங்கரன் விக்கினேஸ்வரா




பிரான்சில் திட்டமிட்டபடி நடைபெறவிருக்கும் 33 ஆவது கோடைக்கால ஒலிம்பிக்ஸ் தொடருக்கான பாரிய அளவில் ஆயுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. லண்டனுக்கு அடுத்தபடியாக, மூன்று முறை கோடைக்கால ஒலிம்பிக்ஸை நடத்தும் இரண்டாவது நகரமாக பாரிஸ் தற்போது திகழ்கிறது.

இந்த ஒலிம்பிக்கில் இஸ்ரேலுக்கு காசாவில் நிகழும் போரால் 2024 ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெறும் போட்டிகளில் இருந்து தடைசெய்யப்படலாம் என்ற கருத்து பரவலாக எழுந்துள்ளது.

விளையாட்டில் அரசியல் தலையீடு தேவையற்றது எனக் கருதப்பட்டாலும், காலங்காலமாக சர்வதேச அரங்கில், முக்கியமாக ஒலிம்பிக் போட்டிகளில் பகிஷ்கரிப்பும், புறக்கணிப்பும் தொடர்ந்து வருகிறது.

1980களில் மாஸ்கோ ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கா பகிஷ்கரித்ததும், பின்னர் 1984இல் அமெரிக்காவில் நடந்த போட்டிகளை ரஷ்யா புறக்கணித்ததும் வரலாறு.

**இஸ்ரேலுக்கு தடை:**

இன்னும் ஏழு மாதங்களில், 2024 ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸில் தொடங்கும் நிலையில், காசாவில் நடந்து வரும் இஸ்ரேல்-ஹமாஸ் போர் இந்த உலகளாவிய விளையாட்டு நிகழ்வை எவ்வாறு பாதிக்கும் என்பது பற்றிய நிச்சயமற்ற தன்மை எழுந்துள்ளது.




இஸ்ரேலிய கொள்கைகள் மீதான நிலைப்பாட்டிற்கும் விமர்சனத்திற்கும் பெயர் பெற்ற அமெரிக்க இதழான 'நேஷன்' ஊடகத்தில் சமீபத்தில் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி இஸ்ரேலை ஒலிம்பிக்கில் இருந்து தடை செய்ய வேண்டுமா என்று கேள்வியை எழுப்பியுள்ளது.

அத்துடன் இஸ்ரேலும் ஐஓசியும் மோதல் போக்கில் உள்ளன என்றும் அது எச்சரித்தது. ஐஓசி ரஷ்யாவை எவ்வாறு உன்னிப்பாகப் பார்ப்பது போல, இஸ்ரேல் அரசுக்கு என்ன நடக்கலாம் என்பதனை எதிர் வரும் வாரங்களில் பார்க்கலாம்.

2024 ஒலிம்பிக்கில் இருந்து ரஷ்யா எப்படி தடை செய்யப்பட்டது பற்றி உலகம் அறிந்தாலும்,

ஐஓசி சமீபத்தில் ரஷ்யாவை வரவிருக்கும் ஒலிம்பிக்கில் ஒரு நாடாக பங்கேற்க தடை விதித்ததுள்ளது. ஆயினும் சில ரஷ்ய விளையாட்டு வீரர்கள் நடுநிலைக் கொடியின் கீழ் போட்டியிடலாம், அவர்கள் வெற்றி பெற்றால், பதக்க விழாவின் போது அவர்களின் தேசிய கீதம் இசைக்கப்படாது எனவும் தெரிவித்தது.

'ஐஓசி' மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை கவனிக்கத் தயாராக உள்ளது. ஆனால் விளையாட்டு வீரர்களுக்கு எதிரான குற்றங்களை அது கருதவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

> **சர்வதேச அரங்கில் ஒலிம்பிக் போட்டிகளில் பகிஷ்கரிப்பும், புறக்கணிப்பும் தொடர்ந்து வருகிறது. 1980களில் மாஸ்கோ ஒலிம்பிக் போட்டிகளை அமெரிக்கா பகிஷ்கரித்ததும், பின்னர் 1984இல் அமெரிக்காவில் நடந்த போட்டிகளை ரஷ்யா புறக்கணித்ததும் வரலாறு.**




இருப்பினும், கடந்த தசாப்தத்தில் இஸ்ரேலிய இராணுவம் பாலஸ்தீனிய கால்பந்து வீரர்களைக் கொன்றபோதும், பாலஸ்தீனத்தின் கால்பந்து மைதானங்களில் குண்டுவீசித் தாக்கியபோதும் ஃபிஃபா (FIFA) என்ற சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் கவலைப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

இஸ்ரேல் மேற்குக் கரை அல்லது காசாவில் நிலத்தை முழுவதுமாக இணைத்துக் கொள்ளத் தொடங்கினால், ரஷ்யாவைப் போலவே இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களையும் நடுநிலையாளர்களாகப் போட்டியிடச் சொல்ல ஐஓசி அழுத்தம் கொடுக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது.

**பாலஸ்தீனம் மீது ஆக்கிரமிப்பு:**

மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான செயலின்மைக்காக, "நடுநிலை" என்ற சொல்லை ஐஓசி அடிக்கடி பயன்படுத்துவதை பலரும் விமர்சித்துள்ளனர்.

ஐஓசி பாலஸ்தீனியர்களை ஒரு அந்நிய மக்களைப் போல நடத்துகிறது. ஒலிம்பிக் குடும்பத்தின் முழு உறுப்பினராக பாலஸ்தீனம் இல்லாவிடுனும், அவர்களுக்கு



அனுதாபமும் ஆதரவும் தேவை. உக்ரைன் மற்றும் பாலஸ்தீனத்தின் மீதான ஆக்கிரமிப்பாளர்கள் விளையாட்டுப் போட்டிகளில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும்.

அயர்லாந்தின் சர்வதேச விளையாட்டு நிறுவனமான ஐளெயமய-ஐசநடயனெ இன் உறுப்பினரான Ken McCue, கூறுகையில் அயர்லாந்தில் உள்ள சில விளையாட்டு வீரர்கள் இஸ்ரேலை ஒலிம்பிக்கில் இருந்து தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை பரிசீலித்து வருகின்றனர். ஐஓசி அதை ரஷ்யாவிடம் செய்து அதைச் செய்தது. ஏன் அவர்களால் அதை இஸ்ரேலுக்கு செய்ய முடியாது என வினவுகின்றனர்.

**ஜெர்மனி முயுனிச் ஒலிம்பிக்ஸ் பணய விவகாரம்:**

1972 ஆம் ஆண்டு ஜெர்மனி நாட்டில் முயுனிச் நகரத்தில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸ் போட்டியில் கலந்து கொள்ளச் சென்ற 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களை பாலஸ்தீனிய இயக்கதைச் சேர்ந்தவர்கள் பணயமாக பிடித்து பின்னர் கொல்லப்பட்டனர்.

இதற்குப் பதிலடியாக இஸ்ரேலிய உளவு நிறுவனம் ஒலிம்பிக் வீரர்களைக் கொன்ற 11 பாலஸ்தீன தீவிரவாதிகளை உலகம் முழுவதும் சுமார் 20 ஆண்டுகள் தேடி வேட்டையாடிக் கொன்றது. முயுனிச் சம்பவத்தையும் அதன் தொடர்ச்சியாக தீவிரவாதிகளை இஸ்ரேல் இராணுவம் வேட்டையாடுவதையும் மையமாக வைத்து ஸ்டீபன் ஸ்பீல்பர்க் 'முயுனிச்" என்ற பெயரில் திரைப்படம் எடுத்து 2005 ஆம் ஆண்டு வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

**நூறு ஆண்டுகளின் பின் களைகட்டும் பாரிஸ்**




**ஒலிம்பிக்ஸ்:**

2024 ஜூலை 26 அன்று ஒலிம்பிக்ஸிற்கான தொடக்க விழாவை, பாரிஸ் நகரில் உள்ள செய்ன் நதிக்கரையில் சுமார் மூன்று மணி நேரம் நடத்துவதற்காகத் திட்டமிட்டுள்ளனர்.

ஒலிம்பிக்ஸின் நூற்றாண்டு விழாவாக இதைக் கொண்டாடும் வகையில், தொடக்க விழாவில் நூறு படகுகள், விளையாட்டு வீரர்களை ஏற்றிக்கொண்டு பாண்ட் டி ஆஸ்டர்லிட்ஸில் தொடங்கி ஈபிள் கோபுரம் வரை அழைத்துச் செல்லவுள்ளது. இப்போட்டி 26 ஜூலை 2024அன்று தொடங்கி 11 ஆகஸ்டு 2024 வரை நடைபெறும். பாரிஸின் முக்கியச் சுற்றுலா தளங்களான வெர்செய்ல்ஸ் அரண்மனை, ஈபிள் கோபுர மைதானம் ஆகியவையும் இதில் இடம்பெற்றுள்ளன.